உ

கடவுள் துணை.

தற்காலம் சுதேச வைத்

கையாண்டு வரும்

அநுபோக

இரண வயித்திய சிந்தாமணி.

இரண்டாம் பதிப்பு.

எஸ். பி. கெ. லால் அவர்களால்

சென்னை - சூளை,

ஸன் ஆப் இந்தியா பிரஸ்ஸில்

பதிப்பிக்கபெற்றது.

1935.

 [இதன் விலை ... 1.

உ

கடவுள் துணை.

தற்காலம் சுதேச வைத்தியர்கள்

கையாண்டு வரும்

அனுபோக

இரண வயித்திய சிந்தாமணி.

இஃது,

வயித்தியவல்லவர்களின் அனுகிரகத்தினபடி

இவை

செஞ்சி. ஏகாம்பரமுதலியார் அவர்களால்

எழுதப்பட்டது.

இரண்டாம் பதிப்பு

எஸ். பி. கெ. லால் அவர்களால்

சென்னை - சூளை,

லைன் ஆப் இந்தியாபிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1935

இதன் விலை ரூபா 1.

உ

கடவுள் துணை.

அட்டவணை.

அட்டவணை.

அட்டவணை.

அட்டவணை.

உ

கடவுள் துணை.

தற்காலம் சுதேச வைத்தியர்கள் கையாண்டுவரும்

அனுபோக

இரண வைத்திய சிந்தாமணி.

விநாயகர் துதி.

கலி விருத்தம்.

அனுபோகரண வயித்தியமஞ்சரி
இனிய செந்தமிழாலு மியற்றிடக்
கனியெனப் பல்லோர்க்கண்டு களித்திடத்
தனியனெங்கரன் தாளிணைப்போற்றுவாம்.

முகவுரை-விருத்தம்.

மாக்ஷிமையாய் நார்ப்பதெண் முனிவர்மூதோர்
மகிமையுள சித்தர்பதினெண்பரோடுங்
காக்ஷியாய் நவகோடி யிருடியானோர
கண்டுரைத்த விருபத்தோர் லட்சங்கிரந்தம்
சாக்ஷியாய் முன்னோற் சொவாக்கின் வண்ணம்
சதுரான ரணவயித்திய சிந்தாமணியை
சூக்ஷியாய் பண்டிதர்கை முறைகள்வாங்கி
செஞ்சி யேகாம்பரமும் வெளியிட்டேனே.

இதுவுமது.

வெளியிட்ட யிரண வயித்திய சிந்தாமணியை
விரும்பியே கையேந்திக் கண்ணுற்றோற்கு
ஒளிவுதரு மனுபோக சித்தியாகும்
உத்தமனே யாசான்போ லுண்மைக்காட்டு

குளிவான விரணங்களெலாங் குடிவிட்டோடும்
குறித்தமுறை யணுவேனும் பிசகிராது
தெளிவான யின்னூலை தேடிதேர்ந்துந்
தேசமெங்கும் யிரணவயித்தியஞ் திகழாய்செய்யே.

நூன்முகம்.

சர்வரிணங்களுக்கும்

மூலாம்.

சாம்பிராணி	விராகனிடை	கவ
பால்துத்தம்	,,	கவ
கருங்குங்கிலியம்	,,	கவ
மயில்துத்தம்	,,	கவ

இந்த நாலு தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நலலெண்ணெய்விட்டு மைபோல் அரைத்து பின்பு அதில் முறையே ஏழுதரம் சலம்விட்டுகழுவி மூலாவைழித்தெடுதது ஒரு பீங்கானில் பததிரப்படுத்தி வைத்துக்கொண்டு சிங்கி, தீராத நீர்சிங்கி, வழற்சிங்கி, கால்களில் உண்டாகும் புத்து இவைகளுக்கு இந்த மூலாவை சீலையிற்றடவி இரணத்தின்மேல்போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறி உலர்ந்துவிடும் நோய் தீரும் நெல்லண்ணை பலம் க.

சதைகரைக்கவும் கிரந்திக்கும் மூலாம்.

பாஷாணம்	காசியிடை	க
அரிதாரம்	,,	க
மயில்துத்தம்	,,	௨
சிவந்தகுங்கிலியம்	,,	௬

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு நல்லெண்ணெய்விட்டு மைபோல் அரைத்து பின்பு அதில் முறையே ஏழுதரம் சலம்விட்டுக்கழுவி மூலாவை வழித்தெடுத்து ஒரு யேனத்தில் வைத்துக்கொண்டு சதைவளர்ந்திருக்கும் இரணங்களுக்கும் கிரந்திக்கும் இந்த மூலாவைச் சீலையிற் றடவிப்போட்டுக் கொண்டுவர சதையைக்கரைக்கும் கிரந்திமுதலான விரணங்களை ஆற்றும்.

சிங்கிரணத்திற்குப் பச்சை சேர்வை சீலை.

இலிங்கம்	விராகனிடை	கவ
மயில்துத்தம்	,,	உ൧
மிருதாருசிங்கி	,,	൧௵
குங்கிலியம்	பலம்	௩

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய், விட்டு மைபோல் அரைத்து பின்பு சலம் விட்டுக் கலக்கிக் கழுவியெடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு இரத்த சிங்கி கிரந்தி தடிப்பு திமிர் நீர்பாச்சல் இவைகளுக்கு இந்த சேர்வையை சீலையில் தடவித்து போட்டுக்கொண்டுவர சகலரிணங்களும் ஆறும் முளை வெளியாகும்.

வேறுவித பச்சை சேர்வை சீலை.

கெவுரிபாஷாணம்	விராகனிடை	கவ
அரிதாரம்	,,	கவ
மஞ்சள்	,,	கவ
நீலம்	,,	கவ

இந்த நாலுதினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய்விட்டு மைபோல் அரைத்து பின்பு சலம்விட்டு அரைத்துக்கழுவி வழித்து ஒரு யேனத்தில் பத்திரப்படுத்தி வைத்துக்கோண்டு சிங்கி பிளவை சதை வளர்ந்திருக்கும் ரணம் முளை ஆருத யிரணங்கள் இவைகட்கு இந்த சேர்வையை சீலையில் தடவிப் போட்டுக்கொண்டு வர கூடிய சீக்கிரத்தில் ஆறி உலரும்.

வேறுவித பச்சை சேர்வை சீலை.

கெவுரிபாஷாணம்	விராகனிடை	கவ
மிருதாருசிங்கி	,,	கவ
மயில்துத்தம்	,,	உ൧
அரிதாரம்	,,	உ൧

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு நல்லெண்ணெ விட்டு மைபோல் அரைத்து பின்பு சலம்விட்டுக் கழுவி வழித்தெடுத்து வைத்துக்கொண்டு உட்சதைவளர்ந்திருக்கும் ரணம் மார்பில் காணும் பிளவை இவைகட்கு இந்த சேர்வையை சீலையிற் றடவி ரணத்தின் மேல் போட்டுகொண்டுவர உட்சதைகளைக் கரைக்கும் இரணத்தையாற்றும்.

வேறுவித பச்சை சேர்வை சீலை.

நிமிளை	விராகனிடை	கவ
பாதரசம்	,,	கவ
பாஷாணம்	,,	கவ
மிருதாருசிங்கி	,,	கவ
அரிதாரம்	,,	கவ
சுண்ணாம்பு	பலம்	க

இந்த ஆறு தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு இரண்டுபலம் நல்லெண்ணெய்வார்த்து மைபோல் அரைத்து பின்பு சலம்விட்டுக் கழுவி யெடுத்துவைத்துக்கொண்டு சூலை கிரந்தி பிளவை பவுத்திரம் இவைகளுக்கு இந்த சேர்வையை சீலையிற்றடவிப் போட்டுக் கொண்டுவர இரணங்கள் ஆறி கூடிய சீக்கிரத்தில் உலரும்.

அரையாப்புகட்டிக்கு பத்து.

சவுக்காரம் சித்தண்டை வெள்ளை இவை மூன்றும் சமனாகவெடுத்து நீர்விட்டு அரைத்துக்கட்டியின்மேல் பூசிக்கொண்டு வரக்கரையும். கரையாவிட்டால் அதன்மேல் புளியும் சேராங்கொட்டையும் சேர்த்து அடைதட்டி வைத்துக்கட்டி மூன்றும்நாள் கட்டு அவிழ்க்கவும் இதுபோல் புளியும்வெள்ளை பாஷாணமும் கால்பலம் சேர்த்து பில்லைதட்டிவைத்துக் கட்டலாகும்.

அரையாப்புக்கு களிம்பு.

வெள்ளைபாஷாணம்	விராகனிடை	கவ
கெவுரிபாஷாணம்	,,	கவ
பாதரசம்	,,	கவ
அரிதாரம்	,,	கவ
மிருதார்சிங்கி	,,	கவ
குங்கிலியம்	பலம்	ச

இந்த ஆறு தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு ஒரு பலம் நல்லெண்ணெய்விட்டு மைபோல் அரைத்து பின்பு சலம்விட்டுக்கழுவி யெடுத்து வைத்துக்கொண்டு கடிவிஷங்களுக்கும் சூலை அரையாப்பு பிளவை பவுத்திரம் குஷ்டம் வெடிஜன்னி இவைகளுக்கு சீலையிற்றடவி மேற்போட சகல விஷமும் நீங்கும் இரணம் ஆறும். கட்டியுடையும் ஏழுமுறை தண்ணீர் விட்டுக் கழுவவும்.

அரையாப்பு கட்டிக்கு வேறுவித களிம்பு.

குங்கிலியம்	பலம்	௧
மயில்துத்தம்	,,	௧
பால்துத்தம்	,,	௧
இலிங்கம்	,,	௧
கர்ப்பூரம்	,,	௧
விளாம்பிசினி	,,	௧

இந்த ஆறு தினுசுகளேயும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு இரண்டு பலம் நல்லெண்ணெய் விட்டு மைபோல் அரைத்து பின்பு முறையே ஏழுதரம் தண்ணீரில் கழுவி வழித்தெடுத்து வைத்துக்கொண்டு சிங்கி பிளவை பவுத்திரம் அரையாப்பு கட்டி ஆறுதவிரணம் இவைகட்கு சீலையில் தடவிமேல் போட்டுவரக் கட்டியுடையும் ரிணம் ஆறும்.

அரையாப்புக்கட்டிக்கு வேறுவித களிம்பு.

பால்துத்தம்	பலம்	௧
நிமிளை	,,	௧
மயில்துத்தம்	,,	௧
மிருதார்சிங்கி	,,	௧
அரிதாரம்	,,	௧

இந்த ஐந்து தினுசுகளேயும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு மூன்றுபலம் நல்லெண்ணெய் நெய் வெண்ணெய் இவைகளால் அரைத்து வழித்தெடுத்து வைத்துக்கொண்டு தண்ணீர் வடிகின்ற சிங்கி கிரந்தி மூலம் பவுத்திரம் கடிவிஷங்கள் பிளவை துடைவாழை இவைகட்கு இந்தக்களிம்பை சீலையிற்றடவி மேலே போட்டுக்கொண்டுவர சர்வவிஷமும் நீங்கும் இரணம் ஆறும் கட்டியுடைந்து ஆறும்.

கிரந்திக்கும் யோனிப்புத்துக்கும் காரசீலை.

நீலம்	பலம்	௧
அரிதாரம்	,,	௧

இந்த இரண்டு தினுசுகளேயும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு இரண்டு பலம் நல்லெண்ணெய் விட்டு அரைத்து பின்பு தண்ணீர்

விட்டரைத்துக்கழுவி யெடுத்துக்கொண்டு இரணம் உதிரக்கிரந்தி உள்வீக்கம் நாய்முள்ளு அரிகிரந்தி ஆறுதப் புண்கள் பவுத்திரம் இவைகட்கு சீலையிற்றுவட்டி இரணங்களின்மேல் போட்டுக்கொண்டுவரவும்.

வேறுவிதக் காரசீலை.

மயில்துத்தம்	விராகனிடை	கீவ
அரிதாரம்	,,	கவ
இலிங்கம்	,,	கவ
கெந்தகம்	,,	கவ
பாதரசம்	,,	கவ
வெங்காயம்	,,	கவ
வெள்ளெருக்கம்பூசார்	பலம்	க

இந்த ஏழுதினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு வூமத்தின்காய் சார்விட்டு அரைத்து சீலையில் ஏற்றி உலர்த்தி வைத்துக்கொண்டு ஆறுதவிரணம் சூலை வெடிப்பு கிரந்தி குஷ்டம் இரத்தக்கிரந்தி பவுத்திரம் இவைகட்கு இந்த சீலையை மேலேபோட்டுக்கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் இரணங்களாறும்.

சகல ரணங்களுக்குந் தயிலம்.

பாதரசம்	பலம்	வ
காந்தபாஷாணம்	,,	வ
கெந்தகம்	,,	வ
அரிதாரம்	,,	வ
லிங்கம்	,,	வ

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு பரித்திப்பாலும் நல்லெண்ணெய்விட்டு மைபோலரைத்து வழித்தெடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு ஆறுதவிரணம் ரத்தங்கட்டிக் கொண்டிருக்குஞ் சதைகள் பிளவை பவுத்திரம் குஷ்டம் இவைகட்கு இந்த தையிலத்தை சீலையிற்றடவி மேலேபோட்டுக்கொண்டுவர சகலரிணங்களும் ஆறும் முளை ஆணி யிவைகள் வெளியாகும்.

சகலரிணங்களுக்கும் உள்ளுக்குகொள்ளுந் தயிலம்

நாபி	விராகனிடை	கவ
பாதரசம்	,,	கவ
கெந்தகம்	,,	கவ

வெள்ளை பாஷாணம் விராகனிடை		கவ
அரிதாரம்	,,	கவ
மிருதார்சிங்கி	,,	கவ
வெண்காரம்	,,	கவ
கஞ்சா	,,	கவ
நிமிளை	,,	கவ
பால்துத்தம்	,,	கவ
மயில்துத்தம்	,,	கவ
லிங்கம்	,,	கவ
மனோசிலை	,,	கவ
கெவுரிபாஷாணம்	,,	கவ
தாளகம்	,,	கவ
ஜாதிலிங்கம்	,,	கவ
இந்துப்பு	,,	கவ

இந்த பதினேழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து சுத்திசெய்து கல்வத்திலிட்டு யெருக்கன்பால் வார்த்து ஒருநாள் முழுவதும் அரைத்து பின்பு சதுரக்கள்ளியின் பாலினால் இரண்டு நாள் ஆறு ஜாமம் அரைத்து சீலையில் ஊட்டி திரிசெய்து நிழலுலர்த்தி வேப்பெண்ணையில் தோய்த்து விளக்கில் பத்தவைக்க அதில் தைலம் சொரியும் அதைக்குப்பியில் பிடித்து அடக்கஞ்செய்து வைத்துக் கொண்டு காலையில் பணவிடை வீதம் பனிரெண்டுநாள் உள்ளுக்குக் கொடுத்துவர சகல விரணங்களும் ஆறி உலரும் இரணங்களின் மீதுப் பூசிக்கொண்டுவர வேண்டும்.

வேறுவித வெள்ளை காரசீலை.

வெள்ளைபாஷாணம்	பலம்	க
கெவுரிபாஷாணம்	,,	க
குங்கிலியம்	,,	க
வெள்ளைச்சவடு	,,	க

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமம் வெள்ளை துணிசேர்த்து இடித்துப் பொடிசெய்து ரணங்களின்மீதுப் போட்டுக் கட்ட சகல ரிணங்களும் ஆறும்.

முளை விழுக்கக் கருப்பு காரசீலை.

கெவுரிபாஷாணம்	பலம்	க
அரிதாரம்	,,	க

சுண்ணம்	பலம்	૭
பால்துத்தம்	,,	૭
மிருதார்சிங்கி	,,	૭
வெள்ளைபாஷாணம்	,,	க
குங்கிலியம்	,,	க

இந்த ஏழுதினுசுகளையும் நிறுத்தெடுத்து இதற்குச்சமனாக மஞ்கள் பொடிசேர்த்து சீலையில் வைத்து முளையின்மீது வைத்துக் கட்ட முளையானது அற்றுவிழும் பாதை தீரும்.

வேறுவிதக் காரசீலை.

வெள்ளைபாஷாணம்	விராகனிடை	கவ
அரிதாரம்	,,	கவ
கெவுரிபாஷாணம்	,,	கவ
மஞ்சள்	,,	கவ
மிருதாருசிங்கி	,,	கவ
நீலம்	,,	ரு
பச்சைக்குங்கிலியம்	,,	க

இவைகளை நிறுத்தெடுத்து அதற்குச் சமனாக துணியைச் சேர்த்து யிடித்துப் பொடித்து எவ்விதமான விரணங்களுக்கும் ஆறாதப் புண்களுக்கும் மேலே போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறிவுலர்ந்துவிடும்.

வேறுவித பொன்சிகப்பு காரசீலை.

லிங்கம்	பலம்	க
காவிச்சீலை	,,	க
மஞ்சள்	,,	க
வெள்ளை பாஷாணம்	,,	க
சங்கு	,,	க

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச்சமனாக சீலைசேர்த்து இடித்துப் பொடித்து முளைகள்மீது வைத்துக்கட்ட முளையானது வெளிவந்துவிடும். பொன்சிகப்பு நிறமுள்ள இரெணங்கள் ஆறும் ஆனால் பழைய துணிகந்தையைச் சேர்க்க வேண்டும்.

மஞ்சள்வர்ண பிளவைக்குப் பொன்சிகப்புக் காரசீலை.

மஞ்சள்	பலம்	வ
வசம்பு	,,	வ
நீலம்	,,	வ
வெள்ளை பாஷாணம்	,,	வ
மிருதார்சிங்கி	,,	வ
தலைமண்டை ஓடு	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்து இடித்துப் பொடித்து அதற்குச் சமன் பழந்துணியைச் சேர்த்து இடித்த மஞ்சள் வர்ணம் பிளவை ரோக விரணங்களுக்கு இந்தக் காரச்சீலையை போட்டுக்கொண்டுவர இரணங்கள் ஆறும் ஆனால் மஞ்சள் வசம்பு இவை இரண்டையும் சுட்டுக் கரியாய்க்கி மேற்கண்ட யிடைகள் போல் சேர்க்கவேண்டியது.

மூலத்திற்குக் குளிர்ந்த பச்சைக் காரசீலை.

மிருதார்சிங்கி	பலம்	வ
கெவுரிபாஷாணம்	,,	வ
அரிதாரம்	,,	வ
வெள்ளைபாஷாணம்	,,	வ
மயில்துத்தம்	,,	வ

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமன் துணிசேர்த்து நொருங்க விடித்துப் பொடியாக்கி பவுத்திரம் மூலம் குஷ்டம் இவைகளுக்கு மேல் போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறும்.

வேறுவித வெள்ளைக் காரம்.

தலைமண்டை ஓடு	பலம்	வ
சங்கு	,,	வ
வெள்ளை பாஷாணம்	,,	வ

இந்த மூன்று தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனாக துணிகூட்டி பொடியாக இடித்து எடுத்து பொறுக்க முடியாத பெரு வந்தத்தோடு நீர்வடியும் புண் பிளவை பவுத்திரம் பரங்கி எறிகுலை இவைகளுக்குமேல் போட்டு உபயோகப்படுத்திக் கொண்டுவர மேற்கூறிய விரணமுதலானதும் ஆறி உலரும்.

வேறுவிதப் பச்சைக் காரம்.

மிருதாருசிங்கி	பலம்	௨
சங்கு	,,	௨
மஞ்சள்	,,	௨
கருங்குங்கிலியம்	,,	௨

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனுக வெள்ளை துணிசேர்த்து இடித்துப் பொடித்து பரங்கிப் புத்து பிளவை பவுத்திரம் ஆருத விரணங்கள் இவைகளுக்கு மேலே போட்டு உபயோகித்துவர குளிர்ச்சியாக விருக்கும் மேற்கூறிய விரணங்கள் ஆறி உலரும்.

இரணங்களுக்கு மஞ்சட் காரம்.

மயில் துத்தம்	பலம்	௨
கருங்குவளை	,,	௨
மஞ்சள்	,,	௨
சங்கு	,,	௨
தலைமண்டைஒடு	,,	௨
சுண்ணம்	,,	௨
குங்கிலியம்	,,	௨
காவிச்சிலை	,,	௨

இந்த எட்டு தினுசுகளையும் நிருத்தெடுத்து அதற்குச் சமனுக துணிசேர்த்து இடித்துப் பொடித்து எறிசிங்கி பிளவை சிங்கி பவுத்திரம் இவைகளின்மேல் போட்டுக்கொண்டுவர குளிர்ந்து விரணங்கள் ஆறி உலரும்.

வேறுவித நீலக் காரம்

பால்துத்தம்	பலம்	௨
சங்கு	,,	௨
மயில்துத்தம்	,,	௨
வெள்ளை பாஷாணம்	,,	௨
நீலம்	,,	௨

இந்த ஐந்துதினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனுக வெள்ளை துணிசேர்த்து இடித்துப் பொடித்து எறிச்சலுடைய இரா

ணத்தின்மேல் போட்டுக்கொண்டுவர யெறிசிங்கி ரெணமானது ஆறி உலரும்.

வேறுவித மஞ்சட் காரம்

மஞ்சள்	பலம்	௳
சங்கு	,,	௳
தலைமண்டை ஓடு	,,	௳
அரிதாரம்	,,	௳
பால்துத்தம்	,,	௳
கருங்குங்கிலியம்	,,	௳

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனாக துணிசேர்த்து இடித்துப் பொடித்து வெறிசிங்கி பரங்கி இவ்வித ரணங்களுக்கு மேல் போட்டுக்கொண்டுவர இரணமாறி உலரும்.

ரத்தசிங்கிற்குக் கருத்த காரம்

மஞ்சள்சுட்டகரி	,,	௳
வசம்புசுட்டகரி	,,	௳
சாக்கு	,,	௳
தலைமண்டை ஓடு	,,	௳
பால்துத்தம்	,,	௳
வெள்ளைபாஷாணம்	,,	௳
துணிகந்தை	,,	௳

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து பஞ்சுபோல் இடித்து பவுத்திரம் பிளவை ரத்தசிங்கி மூலம் முளைநோய் இவைகளுக்கு மேலே வைத்துக்கட்ட இரணங்களாரும் முளை விழுகும்.

கட்டிக்கு வெண்காரப் பொடி

கெவிரிபாஷாணம்	பலம்	௳
அரிதாரம்	,,	௳
வீரம்	,,	௳
பால்துத்தம்	,,	௳
வெண்காரம்	,,	௳
சவுடு	,,	௳
சுண்ணம்	,,	௳

நீலம்	பலம்	௨
மிருதார்சிங்கி	,,	௨
குங்கிலியம்	,,	௨
துணிகந்தை	,,	௨

இந்த பதினொறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து பஞ்சுபோல் யிடித்து வைத்துக்கொண்டு குஷ்டம் பதினெட்டுக்கும் திமிர்களுக்கும். பாம்புகடி எலிகடி நாய்கடி நரிகடி கட்டிகள் சதை வளர்ந்தரணம் குதிகள்ளாம் பரங்கி இவைகளுக்கு மேல் போட்டுக்கட்டிக்கொண்டு வர கூடிய சீக்கிரத்தில் இரணமாறி யுலரும்.

பச்சைக் காரசீலை

மஞ்சள்	பலம்	௧
கெவுரிபாஷாணம்	,,	௧
அரிதாரம்	,,	௧
வெள்ளி	,,	௧
மிருதாருசிங்கி	,,	௧

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதற்குச் சமனுக நீலம் சேர்த்து கல்வத்திலிட்டு கள் வார்த்து அரைத்து மெல்லிசாகிய சீலையில் ஊட்டி திமிர் தொடை வாழை இவைகளுக்குமேல் போட்டுக்கொண்டுவர சொஸ்தமாகும்.

சகலவித சிரங்குக்கும் கருத்த காரசீலை.

மஞ்சள்சுட்டகரி	பலம்	௧
வசம்புசுட்டகரி	,,	௧
எருக்கிலைசுட்டகரி	,,	௧
மயில்துத்தம்	,,	௧
பால்துத்தம்	,,	௧
கெவுரிபாஷாணம்	,,	௧
வெள்ளைபாஷாணம்	,,	௧
சங்கு	,,	௧

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு முலைப்பாலும் கையாந்தகரைச் சாறும் விட்டு மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு கடிவிஷங்களா லுண்டாகும் இரணம். ஆறுதப் புண் திமிர் தினவு சகலவிதமான சிரங்கு சொறிசிரங்கு இவைகட்குச்

சீலை தடவி மேல் போட்டுக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறி உலரும்.

மஞ்சட் காரசீலை.

பாதரசம்	விராகனிடை	கவ
கெவுரிபாஷாணம்	,,	கவ
வீரம்	,,	கவ
அரிதாரம்	,,	கவ
மிருதார்சிங்கி	,,	கவ
கடுக்காய்	,,	கவ
கர்க்கடகசிங்கி	,,	கவ

இந்த எழு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு கோழிமுட்டையைக் கொண்டுவந்து சிகப்பு அம்பிலியைப்போக்கி வெள்ளை அம்பிலிவிட்டு மைபோல் அரைத்து சீலையிலூட்டி இரண முதலான கட்டிகள்மீதுப் போட்டுக்கொண்டுவர இரணமாறும்.

நொணுக்காய் பருவுக்கு சிகப்பு காரசீலை

பாதரசம்	பலம்	வ
லிங்கம்	,,	வ
அரிதாரம்	,,	வ
கெவுரிபாஷாணம்	,,	வ
மிருதார்சிங்கி	,,	வ
காவிமண்	,,	வ

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழஞ்சாறும் முலைப்பாலும் விட்டு மைபோ லரைத்து வைத்துக்கொண்டு நொணுக்காப்புண் ஆருத விரணம் பிளவை தொடைப் புழுவினுலுண்டாகிய பவுத்திரம் எழுடன் ஆனைக்கால் விரணம் இவை முதலானதற்கும் சீலையிற்றடவி இரணங்களின் மீதுப் போட்டுக்கொண்டுவர ஆறி உலரும்.

வாய்புத்திற்கு வெள்ளைக் காரசீலை.

சங்கு	பலம்	வ
பாதரசம்	,,	வ
குங்கிலியம்	,,	வ

வெள்ளைதுணி	பலம்	வ
சவுடு	,,	வ
சுண்ணாம்பு	,,	வ

இந்த ஆறு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு மைபோல் அரைத்து வழித்து வைத்துக் கொண்டு வாய்புத்து பிளவை யிவைகளுக்கு சீலையில் தடவி மேல் போட்டுக் கொண்டுவர இரணமானது ஆறும் வாய்புத்து தீரும். மற்றைய விரணங்களுக்கு முபயோகப்படுத்தலாம்.

சகலவிரணங்களுக்கும் நீலக் கார்சீலை.

வெந்ததலைமண்டைஓடு	பலம்	அரை
சங்கு	,,	,,
பால்துத்தம்	,,	,,
வீரம்	,,	,,
வெள்ளைபாஷாணம்	,,	,,
அரிதாரம்	,,	,,
சவுட்டுமண்	,,	,,
நீலம்	,,	,,

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு அரைத்து பழைய துணியில்தடவி இரணங்களின் மீதுப் போட்டுக்கொண்டுவர இரணங்கள் ஆறும் பாதைதீரும்.

புரைச்சதை யுண்ணுந்திரி.

மயில்துத்தம்	பலம்	வ
பால்துத்தம்	,,	வ
பாதரசம்	,,	வ
அரிதாரம்	,,	வ
நீலம்	,,	வ
கெந்தகம்	,,	வ

இந்த ஆறு தினுசுகளையும் பச்சை வெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு இளநீர் விட்டு மைபோல் அரைத்து சீலையில் ஊட்டி சதையை தின்றுக்கொண்டுப் போகும் புரையில் இந்த சீலையை திரி செய்து புரைக்குள் யேற்றிக்கொண்டுவர சதையைக் கரைத்துப் புரை ரிணத்தைக் கூடிய சீக்கிரத்தில் ஆற்றி உலர்த்திவிடும்.

முடுகும் பச்சை தண்ணீர்.

மிருதார்சிங்கி	பலம்	½
கர்க்கடக பாஷாணம்	,,	½
நிமிளை	,,	½
காந்தக்கல்	,,	½
அரிதாரம்	,,	½
லிங்கம்	,,	½
செந்தூரம்	,,	½
கெந்தி	,,	½
வெள்ளை பாஷாணம்	,,	½

இந்த ஒன்பது தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்து சுன்னமாகப் பொடித்து வைத்துக்கொண்டு இரணங்களின் மீதுப் போட்டுக்கொண்டுவர சகல ரிணங்களும் ஆறி உலரும்.

சிகப்புத் தண்ணீர்.

லிங்கம்	பலம்	வ
செந்தூரம்	,,	வ
நீலம்	,,	வ
குங்கிலியம்	,,	வ
காவிமண்	,,	வ
சீலை	,,	வ
வெள்ளை பாஷாணம்	,,	வ

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் கொடிப்பாலைக் சார்விட்டு மைபோலரைத்து வழித்து பெரியக்குப்பியிலடைக்கிக் கொண்டுப் பத்திரப்படுத்திவைத்துக்கொண்டு சீலையில் தோய்த்து திறிசெய்து புரைரெணங்களுக்கு உள்ளூட்ட ஆறுத விரணங்கள் ஆறும் யெறிச்சலடங்கும் பவுத்திரம் பிளவை தொடைவாழைப்பருவு யிவைகளுக்கும் மேல்போட்டு உபயோகப்படுத்திக் கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் சொஸ்தமாகும்.

முடுகு பச்சைத் தண்ணீர்.

மிருதார்சிங்கி	பலம்	வ
மயில்துத்தம்	,,	வ

பால்துத்தம்	பலம்	வ
கெவுரிபாஷாணம்	,,	வ
பரங்கிப்பட்டை	,,	வ
அரிதாரம்	,,	வ
மஞ்சள்	,,	வ
வெள்ளை பாஷாணம்	,,	வ
நீலம்	,,	வ

இந்த ஒன்பது தினுசுகளையும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு இரண்டுபடி முந்திரிநீர்விட்டு அரைத்து குப்பியிலடக்கஞ் செய்துவைத்துக்கொண்டு மூளை மூலம் குதிகள்ளான் நுணப்பருவு குஷ்டம் பிளவை பவுத்திரம் இவைகளுக்கு இந்த தண்ணீரை சீலையில் நனைத்து மேலே போட்டுக்கொண்டுவர இரணங்களாறும் மூளைகளாறும் பாதை தீரும்.

பிளவைகட்டிக்குக் குங்குமத் தண்ணீர்

சவுட்டுமண்	பலம்	அரை
கெவுரிபாஷாணம்	,,	,,
அரிதாரம்	,,	,,
மஞ்சள்	,,	,,
மிருதார்சிங்கி	,,	,,
வெள்ளைபாஷாணம்	,,	,,
கர்ப்பூரம்	,,	,,
குங்கிலியம்	,,	,,

இந்த எட்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு முந்திரிநீர் வார்த்து அரைத்து குப்பியிலடக்கஞ் செய்து வைத்துக்கொண்டு பிளவை கட்டி இவைகளுக்கு சீலையில் தடவி போட்டுக்கொண்டுவர கட்டியுடையும் பிளவை பிரணங்களை ஆற்றும்.

வேறு நீலக் காரத் தண்ணீர்.

காந்தை	விராகனிடை	கவ
பாதரசம்	,,	கவ
கெவுரிபாஷாணம்	,,	கவ
வெள்ளைபாஷாணம்	,,	கவ
சந்தனம்	,,	கவ

பரங்கிப்பட்டை	விராகனிடை	கவ
சவுட்டுமண்	,,	கவ
சுண்ணும்பு	,,	கவ
நீலம்	பலம்	க

இந்த ஒன்பது தினுசுகளேயும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு மூந்திரி நீர்வார்த்து மைபோலரைத்து குப்பியிலடைத்து வைத்துக்கொண்டு சகல விரணங்களுக்கும் சீலையில் நனைத்துக் மேலுக்குப் போட்டுக்கொண்டுவர விரணத்தை ஆற்றிவிடும்.

வேறுவித கடுங்கார வெள்ளை நீர்.

சுட்டதலைமண்டைஓடு	பலம்	வ
சுண்ணும்பு	,,	வ
பரங்கிப்பட்டை	,,	வ
வெள்ளைபாஷாணம்	,,	வ
நவாச்சாரம்	,,	வ
படிகாரம்	,,	வ
வெங்காரம்	,,	வ
சங்கு	,,	வ

இந்த எட்டு தினுசுகளேயும் பச்சைவெட்டாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு அதற்குச் சமன் மூந்திரிநீர் விட்டு மைபோல் அரைத்து வழித்துக் குப்பியில் அடக்கஞ்செய்து வைத்துக்கொண்டு சகல விரணங்களுக்கும் பிளவை முதலானக் கட்டிகளுக்கும் சீலையிலேற்றி மேல் போட்டுக்கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறி யுலரும்.

கிரந்திக்குப் பச்சை நீர்.

நீலம்	பலம்	ஐ
கெவுரிபாஷாணம்	,,	ஐ
அரிதாரம்	,,	ஐ
மஞ்சள்	,,	ஐ
குங்கிலியம்	,,	ஐ
மயில்துத்தம்	,,	ஐ

இந்த ஆறு தினுசுகளேயும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் கள் வார்த்து அரைத்து வழித்து குப்பியில் அடக்கஞ்செய்து வைத்துக்

கொண்டு கிரந்தி முதலாகிய விரணங்களுக்கு இதை சீலையில் நனைத்து விரணங்களின்மீதுப் போட்டுக்கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் ஆறி யுலரும்.

எரிரணத்திற்கு குளிர்ந்த நீர்.

பாதரசம்	பலம்	௧
சங்கு	,,	௧
காவிக்கல்	,,	௧
லிங்கம்	,,	௧
மயில்துத்தம்	,,	௧
பால்துத்தம்	,,	௧
கடுக்காய்	,,	௧

இந்த எழுதினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு கள் வார்த்து மைபோல் அரைத்து குப்பியிலடக்கஞ் செய்துவைத்துக் கொண்டு எறி ரணங்களின்மீதுப் பூசிக்கொண்டுவர விரணமாறும் குளிர்ச்சியாக விருக்கும்.

எரிரெணத்திற்கு குளிர்ந்த நீலநீர்.

பாதரசம்	விராகனிடை	கவ
கெந்தி	,,	கவ
தலைமண்டைஓடு	,,	கவ
காவிக்கல்	,,	கவ
லிங்கம்	,,	கவ
நீலம்	,,	கவ

இந்த ஆறுதினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு காலைக் கள் வார்த்து மைபோல் அரைத்து வழித்துக் குப்பியில் அடக்கஞ்செய்து வைத்துக்கொண்டு எரிச்சலுள்ள விரணங்களின் மீது போட்டுக்கொண்டுவர குளிர்ச்சியாக விருக்கும் இரணம் ஆறும்.

வேறுமுறை குளிர்ந்த நீலநீர்.

சங்கு	பலம்	வ
படிகாரம்	,,	வ
வெண்காரம்	,,	வ

பால்துத்தம்	பலம்	வ
சாம்பிராணி	,,	வ
வெந்ததலை மண்டை ஓடு	,,	வ
வெள்ளை குங்கிலியம்	,,	வ

இந்த ஏழு தினுசுகளையும் நிருத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் கள் வார்த்து மைபோல் அரைத்து வழித்துக் குப்பியில் அடக்கஞ்செய்து வைத்துக்கொண்டு எறிச்சலுடைய இரணங்களின் மீதுப் போட்டுக் கொண்டுவரக் குளிர்ச்சியாக விருக்கும் சகலமான விரணங்களையும் ஆற்றிவிடும்.

எரிரணத்திற்கு குளிர்ந்த குங்குமதண்ணீர்.

கஸ்தூரிமஞ்சள்	பலம்	வ
மிருதார்சிங்கு	,,	வ
கர்க்கடகச்சிங்கி	,,	வ
கடுக்காய்	,,	வ
பால்துத்தம்	,,	வ

இந்த ஐந்து தினுசுகளையும் நிருத்தெடுத்துக் கல்வத்திலிட்டுக் கள் வார்த்து மைபோல் அரைத்து வழித்து குப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக்கொண்டு சீலையில் நனைத்து எறிகின்ற விரணத்தின் மீதுப் போட்டுக்கொண்டுவர குளிர்ச்சியாக விருக்கும் இரணம் ஆறி யுலரும்.

எரி ரீணத்திற்கு கறுத்த குளிர்ந்தநீர்.

மஞ்சள்சுட்டகரி	பலம்	௨
வசம்புசுட்டகரி	,,	௨
பாதரசம்	,,	௨
கெந்தகம்	,,	௨
நீலம்	,,	௨

இந்த ஐந்து தினுசுகளையும் நிருத்தெடுத்துக் கல்வத்திலிட்டு கள்வார்த்து மைபோல் அரைத்து குப்பியிலடைத்து வைத்துக் கொண்டு எறிச்சலுடைய எவ்வித விரணங்களுக்கும் இந்த நீரைச் சீலையில் நனைத்து மேலே போட்டுக்கொண்டுவர குளிர்ச்சியாக விருக் கும் சகல இரணங்களும் ஆறியுலரும்.

சர்வ ரெணங்களுக்கும் சிங்கித்தயிலம்.

மிருதார்சிங்கு	பலம்	௨
கெந்தகம்	,,	௨
நீலம்	,,	௨
பாதரசம்	,,	௨
படிகாரம்	,,	௨
பரங்கிப்பட்டை	,,	௨
கடுக்காய்	,,	௨
பால்துத்தம்	,,	௨
வசம்பு	,,	௨
வெங்காயம்	,,	௨

இந்தப் பத்து தினுசுகளையும் நிருத்தெடுத்து பொடித்து ஒரு பாண்டத்திலிட்டு அதில் அரைபடி புங்கம்பாலும் அரைபடி ஒதியன் பாலும் அரைபடி தேங்காய் நெய்யும் வார்த்துக் கடுகுபதமாகக் காய்ச்சி இறக்கி வைத்துக்கொண்டு|அறிபிளவை புரை கிரந்தி பரங்கி தொடைவாழை எறிகின்ற சூலை ரணம் வெடிரணம் பவுத்திரம் இவைகளுக்கு மேலுக்கு உபயோகப்படுத்த ஆறியுலரும்.

வேறுவித சிங்கித்தயிலம்.

கஸ்தூரிமஞ்சள்	விராகனிடை	கவ
நிமிளை	,,	கவ
காந்தக்கல்	,,	கவ
பாதரசம்	,,	கவ
அரிதாரம்	,,	கவ
குங்கிலியம்	,,	கவ
வெள்ளை பாஷாணம்	,,	கவ
வசம்பு	,,	கவ
வெங்காயம்	,,	கவ

இந்த ஒன்பது தினுசுகளையும் பச்சைவெட்டாக நிருத்தெடுத்து பொடித்து ஓர் பாண்டத்திலிட்டு புங்கம் பால்படி அரை ஒதியன் பால் படி அரை நல்லெண்ணை படி ஒன்று அதில் வார்த்து யெண்ணை பதத்தில் காய்ச்சி யிரக்கி வைத்துக்கொண்டு சிங்கிபிளவை இரணம் புத்து அரையாப்பு பவுத்திரம் சூலை இவைகளுக்கு சீலையில் இந்த தயிலத்தை தோய்த்து மேலே போட்டுக்கொண்டு வர ஆறியுலரும்.

வேறுமுறை பங்காளப்பச்சை தயிலம்.

பாதரசம்	விராகனிடை	கவ
கெந்தகம்	,,	கவ
அரிதாரம்	,,	கவ
மயில்துத்தம்	,,	கவ
பால்துத்தம்	,,	கவ
குங்கிலியம்	,,	கவ
அபினி	,,	கவ
காசுக்கட்டி	,,	கவ
படிகாரம்	,,	கவ
பங்காளபச்சை	,,	கவ
வெள்ளைபாஷாணம்	,,	கவ
வெங்காயம்	,,	கவ
கஸ்தூரிமஞ்சள்	,,	கவ
வசம்பு	,,	கவ

இந்த பதினாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துப் பொடித்து ஒரு பாண்டத்திலிட்டு அதில் நல்லெண்ணை தேங்காய்பால் புங்கன் பால் ஒதியன்பால் வகைக்குப்படியாக வார்த்து அடுப்பேற்றி தயில பதமாகக் காச்சி வடித்து வைத்துக்கொண்டு புண் புரை இரணம் பவுத்திரம் ஆறாத சகல விதமான விரணங்கள் இந்த தயிலத்தை சீலையில் நனைத்து மேலே போட்டுக்கொண்டுவர சகலவிரணங்களும் ஆறியுலரும்.

சகலரெணங்களுக்கும் மேல்பூசும் மருந்து.

அரைபலம் பங்காளப்பச்சையை மைனம் போல் பொடிசெய்து ஏழரைபலம் நெய்வார்த்து அல்லது வெண்ணெயிலாவது நன்றாயரைத்து நெடுநாளாய் ஆறாம லிருக்கும் புண்களுக்கும் மேல் போட்டுக்கொண்டுவர ஆறியுலரும் மேகத்தைச்சார்ந்த கெட்டத் தொண்டைப் புண்களுக்கு ஒரு யிரகின் நுனியால் தொட்டு, தடவிக் கொண்டுவர ஆறியுலரும் மேற்படிப் புண்களுக்கு நெய் அல்லது வெண்ணெயைப் பார்க்கிலும் தேன் நன்று ஒன்றிலுந்தீராத படர் தாமரைக்கு நாளொன்றுக்கு இரண்டுதரம் மேற்படி குழம்பை மேலுக்கு நன்றாய் தேக்கில் படர்தாமரை அகன்று வாசியாகும் வுள்ளுக்கு உபயோகிக்கக்கூடாது.

வேறுவித பச்சைதயிலம்.

மரமஞ்சள்	விராகனிடை	கவ
கர்க்கடகசிங்கி	,,	கவ
வெங்காயம்	,,	கவ
கடுக்காய்	,,	கவ
குண்டுமணிவிதை	,,	கவ
பால்துத்தம்	,,	கவ
மயில்துத்தம்	,,	கவ
பாதரசம்	,,	கவ
மிருதாருசிங்கி	,,	கவ
நீலம்	,,	கவ
அரிதாரம்	,,	கவ
வசம்பு	,,	கவ
கொருக்காபுளி	,,	கவ

இந்தப் பதிமூன்று |தினுசுகளையும் பச்சைவெட்டாக நிருத்து யெடுத்துப் பொடித்து வைத்துக்கொண்டு ஒரு மண் பாண்டத்தில் ஒருபடி நல்லெண்ணெயும் கால்படி மூலைப்பாலும் கால்படி குமரிச் சாறும் விட்டு அதில் பொடித்த தூளைப்போட்டு யெறித்துக்காச்சி தயிலபதத்தில் யிறக்கி வடித்து வைத்துக்கொண்டு ஆராத விரணம் தண்ணீர் வடிகின்ற விரணம் பிளவை புத்து பவுத்திரம் இவைகட்கு சீலையில் நனைத்து மேலுக்குப் போட்டுக்கொண்டுவர சகலவிதமான விரணங்களும் ஆறியுலரும்.

புண்கள் புரைகள் மாரத்தயிலம்.

குங்கிலியம்	விராகனிடை	கவ
சாம்பிராணி	,,	கவ
பாதரசம்	,,	கவ
கெந்தகம்	,,	கவ
மயில்துத்தம்	,,	கவ
பால்துத்தம்	,,	கவ
நீலம்	பலம்	க

இந்த எழுதினுசுகளையும் பொடித்து வைத்துக்கொண்டு ஒரு மண் பாண்டத்தில்.

தும்பைச்சாறு	படி	க
முருங்கையிலைசார்	,,	க
துளசியிலைசார்	,,	க
புங்கனிலைசார்	,,	க
நுணாயிலைசார்	,,	க
கையாந்தகரைசார்	,,	க
குமரிச்சார்	,,	க
வில்வயிலைச்சார்	,,	க
நல்லெண்ணெய்	,,	க
புங்கம்பாலு	,,	வ

இவைகளை விட்டு அதில் பொடித்த தூள்களைப் போட்டு எரித்து தயிலபதமாக விரக்கி வடித்து வைத்துக்கொண்டு சூலை புரை பிளவை தாள்புத்து பவுத்திரம் இன்னம் பலவிதமான விரணங்களுக்கும் இந்த தயிலத்தை சீலையில் துவட்டி மேல் போட்டுக்கொண்டு வர விரணங்கள் ஆறி யுலரும் புரைகள் மாறும்.

புரைகள் மாறக் குங்குமத்தயிலம்.

மஞ்சள்	விராகனிடை	கவ
வசம்பு	,,	கவ
அரிதாரம்	,,	கவ
பாதரசம்	,,	கவ
பால்துத்தம்	,,	கவ
படிகாரம்	,,	கவ
மிருதார்சிங்கி	,,	கவ
கர்க்கடகசிங்கி	,,	கவ
வெங்காயம்	,,	கவ
கல்நார்	,,	கவ
அபினி	,,	கவ

இந்தப்பதிரேறு தினுசுகளையும் பச்சைவெட்டாக நிருத்தெடுத்து பொடித்து வைத்துக்கொண்டு ஒரு மண்பாத்திரத்தில் நல்லெண்ணெய் படிவிட்டு அத்துடன் முலைப்பால் படிவிட்டு பொடித்து வைத்த சரக்குகளை அதில் போட்டு யெறித்துக் காய்ச்சி யிரக்கி வடித்து வைத்துக்கொண்டு ஆருதவிரணங்கள் பிளவை புளீர புண் இவைகட்கு இந்த தயிலத்தை சீலையில் நனைத்துப் போட்டுக்கொண்டு வர கூடிய சீக்கிரத்தில் ஆறியுலரும்.

சகல விரணங்களின் புரை மாற்றும் குமரித்தயிலம்.

நொச்சியிலைச்சார்	படி	ஒரு
அழிஞ்சியிலைச்சார்	,,	,,
நுணாயிலைச்சார்	,,	,,
முருங்கயிலைச்சார்	,,	,,
அவுரியிலைச்சார்	,,	,,
சங்கனிலைச்சார்	,,	,,
கையாந்தகரைச்சார்	,,	,,
துளசிச்சார்	,,	,,
தும்பயிலைச்சார்	,,	,,
குப்பமேனிச்சார்	,,	,,
நல்லெண்ணெய்	,,	க
குமரிச்சார்	,,	க

இந்த சாறு யெண்ணெய்களை யொன்ருய்க் கலந்து ஒருபாண்டத்தில்விட்டு அதில்

பாதரசம்	விராகனிடை	கவ
கெந்தகம்	,,	கவ
சித்திரமூலம்	,,	கவ
வாலுழுவை	,,	கவ
பால்துத்தம்	,,	கவ

இவைகளைப் பொடித்து சாறுயெண்ணையுடன் சேர்த்து யெரித்து தயில பதமாகக்காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு சகல விரணங்களுக்கும் சீலையில் நனைத்து மேல் போட்டுக்கொண்டு வர ஆறியுலரும் புரைகள் மாறும்.

சர்வரிணங்களுக்கும் வேறுமுறை தயிலம்.

சங்கனிலைச்சார்	படி	ப௨
துளசியிலைச்சார்	,,	ப௨
நாயுருவிச்சார்	,,	ப௨
சாரணைச்சார்	,,	ப௨
கொன்றைச்சார்	,,	ப௨
கொடிவேலிச்சார்	,,	ப௨
புங்கன்பால்	,,	ப௨
நுணாயிலைச்சார்.	,,	ப௨
ஆவிரியிலைச்சார்	,,	ப௨
கையாந்தகரைச்சார்	,,	ப௨
துத்தியிலைச்சார்	,,	ப௨
தேங்காய்நெய்	,,	ப௨
முலைப்பால்	,,	ப௨

இந்தச்சாறு தேங்காய் நெய் முலைப்பால் இவைகளை ஒருமண் பாண்டத்தில் வார்த்து அதில்,

மயில்துத்தம்	பலம்	௩
கெந்தி	,,	௩
பால்துத்தம்	,,	௩
பாதரசம்	,,	௩
அரிதாரம்	,,	௩
மரமஞ்சள்	,,	௩

இந்த ஆறு தினுசுகளையும் பொடித்துப் போட்டு எறித்துக் காச்சி தயில பதமாக விரைக்கி வடித்து வைத்துக்கொண்டு ஆறுதவிரணம் பிளவை சிங்கி தொடைவாழை பவுத்திரம் இவைகள் முதலானதற்கும் இந்தத் தயிலத்தை சீலையில் தோய்த்து இரணங்களின்மீதுப் போட்டுக்கொண்டுவர கூடிய சீக்கிரத்தில் விரணங்கள் ஆறிவுலரும் புரைகளானது மாறும்.

சர்வரிணங்களுக்கும் மேற்பூசும் மருந்து.

முருங்கையிலைச்சார்	படி	ப௨
மின்னையிலைச்சார்	,,	ப௨

தும்பயிலைச்சார்	படி	ப௨
அவிரியிலைச்சார்	,,	ப௨
அத்திப்பால்	,,	ப௨
வேப்பின்சார்	,,	ப௨
செருப்படைச்சார்	,,	ப௨
பேயத்திச்சார்	,,	ப௨
கொடிவேலிச்சார்	,,	ப௨
கருநொச்சிலைச்சார்	,,	ப௨
கையாந்தகரைச்சார்	,,	ப௨

இவைகளைக் கலந்து யெவ்வித இரணங்களுக்கும் மேல்பூசிக் கொண்டுவர ஆறியுலரும்.

சர்வ வீக்கத்திற்கும் பற்று.

அபீன்	காசியிடை	௧
கடுகு	பலம்	௧
பெருங்காயம்	,,	௧
நேர்வாளம்	,,	௧
கரும்பவளம்	,,	௧

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு எருக்கன்சார்விட்டு மைபோல் அரைத்து வீக்கத்தின் மீது பூசிக் கொண்டுவர பிளவை கட்டி சூலை பவுத்திரம் இவைகளின் வீக்கம் வாங்கி நோய்தீரும்.

அரையாப்புக் கட்டிக்கு வேறுமுறை பற்று.

பவழம்	பலம்	௧
கருஞ்சீரகம்	,,	௧
அபினி	,,	௧
பெருஞ்காயம்	,,	௧
நாபி	,,	௧
வெள்ளைப்பூண்டு	,,	௧
சித்திரைமூலம்	,,	௧

இந்த ஏழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு கள்ளிச்சார் விடுத்து மைனம்போல் அரைத்து அரையாப்பு பிளவை

பவுத்திரம் இன்னும் பலவிதமான வீக்கங்களுக்கும் கட்டிகளுக்கும் மேலே பூசிக் கொண்டுவர வீக்கமானது வாடும் கட்டியானதுக் கரைந்துப்போகும்.

சர்வ வீக்கத்திற்கும் கொடும் பற்று.

பாதரசம்	பலம்	வ
கெந்தகம்	,,	வ
வெங்காயம்	,,	வ
நேர்வாளம்	,,	வ
பெருங்காயம்	,,	வ

இந்த ஐந்து தினுசுகளையும் கல்வத்திலிட்டு திருகுகள்ளிச்சார் விட்டு மைபோல் அரைத்து கட்டிகள் சூலை வாதக் கட்டிகள் மேல் வீக்கம் பிளவை பவுத்திரம் இவைகட்கு மேல் பூசிக்கொண்டு வர வீக்கங்கள் வாடும் கட்டிகள் கரையும்.

வேறுமுறை வீக்கங்களுக்குப் பற்று.

பாதரசம்	பலம்	வ
கெந்தகம்	,,	வ
பெருங்காயம்	,,	வ
நேர்வாளம்	,,	வ
கரும்பவளம்	,,	வ
அபினி	,,	வ
கருஞ்சீரகம்	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு பொற்றலைக்கரிப் பான் சார்விட்டு மைபோல் அரைத்து கட்டிகள் சூலை பிளவை வீக்கம் இவைகட்கு மேல் பூசிக்கொண்டுவர வீக்கங்கள் வாடும் கட்டிகள் கரையும் பிளவை சூலைகள் தீரும்.

அரையாப்புக்கட்டிக்கு வேறுமுறைப் பற்று.

லிங்கம்	பலம்	வ
அரிதாரம்	,,	வ
குங்கிலியம்	,,	வ
கரும்பவளம்	,,	வ
அபினி	காசியிடை	க
பெருங்காயம்	பலம்	வ

இவைகளை நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு திருகுகள்ளிச்சார் விட்டு மைனம்போல் அரைத்து பிளவை பவுத்திரம் கட்டிகள் அரையாப்பு சூலை பதினெட்டுக்கும் இதை மேல் பூசிக்கொண்டுவர கட்டிகள் கரையும் வீக்கங்கள் வாடும்.

சகல விதமான கட்டிகளுக்கும் மேல்பூசும் பற்று.

கடுக்காய்	பலம்	வ
சுக்கு	,,	வ
கரும்பவளம்	,,	வ
நாபி	,,	வ
பெருங்காயம்	,,	வ
அபினி	காசியிடை	க
சித்திரைமூலம்	,,	வ
நேர்வளப்பருப்பு	,,	வ
யெருக்கன்வேர்	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு எருக்கன் பால் வார்த்து மைபோல் அரைத்து சர்வ கட்டிகளுக்கும் மேல் பற்றுப் போடக் கட்டிக்கரையும் அல்லது உடைந்து பாதைதீரும்.

சகலவித கட்டிகட்கு மேல்பூசும் வேறுமுறைப் பற்று.

ஊமத்தங்காய்	பலம்	வ
சித்திரமூலம்வேர்	,,	வ
அழிஞ்சில்	,,	வ
மகிழம்பருப்பு	,,	வ
அபினி	காசியிடை	க
கஞ்சா	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்து எருக்கன்பால் வார்த்து அரைத்து கட்டிகள்மீது பற்றுகப் போட்டுக் கொண்டுவர கட்டி கரையும் அல்லது உடைந்து பாதை தீரும்.

சர்வ விஷ வீக்கங்களுக்கும் மேல்பூசும் பற்று.

கல் சுண்ணும்பு முருங்கைப்பட்டை வெங்காயம் வசம்பு பேய் பீர்க்கிலை இவைகளை ஓர் நிறையாக நிறுத்தெடுத்து யெருக்கன்பால் விட்டு மைபோல் அரைத்து அரையாப்புகட்டி முதல் பலவிதமானக்

கட்டிகீட்கும் மேல் பற்றுகப்போட கட்டிகள் கரைந்து அல்லது பழுத்து உடைந்து பாதைகள் தீரும்.

இரணங்களுக்குப் பிளாஸ்திரி.

ஒருபலம் குங்கிலியத்தை வெண்ணெயில் கலந்துக் கடைய வெண்ணெயானது திரளும் அதை வழித்து டப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக்கொண்டு இரணங்களுக்கு சீலையிற்றடவிப் போட்டுக்கொண்டுவர ரத்தம் சீழ் போகும் எறிச்சல் புடைச்சல் தீரும் நரம்பு வலியுடன் இசுவானதும் போகும் இரணம் ஆறியுலரும்.

சர்வ்ரெணங்களுக்கும் முலாம்.

லிங்கம்	பலம்	வ
பால் துத்தம்	,,	வ
சிங்கி	,,	வ
கெந்தி	,,	வ
குங்கிலியம்	,,	வ
ரசகர்ப்பூரம்	,,	வ
கடுக்காய்	,,	வ
மாசிக்காய்	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு பசும்வெண்ணெ போட்டு மூன்றுநாள் வரைக்கும் அரைத்து பனிநீர் விட்டு அரைத்து வழித்து முலாமை டப்பி தண்ணீர் அடக்கஞ் செய்து வைத்துக் கொண்டு புண் புரை முதலான விரணங்களுக்கு இந்த முலாமைப் போட்டுக்கொண்டு வர சகல ரிணங்களும் ஆறி யுலரும்.

சர்வ ரிணங்களுக்கும் வேறுமுறை முலாம்.

மாசிக்காய்	பலம்	½
கடுக்காய்	,,	½
பால் துத்தம்	,,	½
லிங்கம்	,,	½
கெந்தி	,,	½
சிங்கி	,,	½
பூரம்	,,	½
குங்கிலியம்	,,	½

இவைகளை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு பசுவின் வெண்ணை விட்டு மூன்றுநாள் வரைக்கும் அரைத்து பனிநீர் விட்டு ஆட்டிக் கழுவி குற்றம் போக்கி முலாந்திரண்டு வருகும்போது முலாணை வழித்து டப்பியில் அடக்கஞ் செய்து வைத்துக்கொண்டு சகல ரணங் களுக்கும் இந்த முலாணைப் போட்டுக் கொண்டு வர ஆறியுலரும்.

தடிப்புமுதலிய அரையாப்புகள் கரைவதற்கு கட்டு.

காசிக்கட்டி	பலம்	வ
செங்கொட்டை	,,	வ
காடிகாரம்	,,	வ
கொடிவேலி	,,	வ
பனவெல்லம்	,,	வ

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அரைத்து அரை யாப்புகட்டியின் மீதுவைத்து மூன்றுநாள் கட்டிக்கொண்டுவர கட்டி யானது கரையும் அல்லது உடையும்.

அரையாப்பு இரணத்திற்கு சீலை.

குங்கிலியம்	பலம்	க

நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு பசும்வெண்ணெய் சேர்த்து மைனம்போல் அரைத்து வைத்துக்கொண்டு சீலையில் தடவி அரை யாப்பு முதலிய விரணங்களின்மீதுப் போட்டுக் கொண்டுவர ஆறி யுலரும்.

கொருக்கு முதலிய புண்களுக்கு மேற்பூசும் முலாம்.

மிருதாருசிங்கு	விராகனிடை	கவ
கெந்தி	,,	கவ
பூரம்	,,	கவ
குங்கிலியம்	,,	கவ
பால்துத்தம்	,,	கவ

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு தேங்காநெய்விட்டு மைனம்போல் அரைத்து அதில் முறையே ஏழு தரம் ஜலம்விட்டு அரைத்துக்கழுவி வழித்தெடுத்து வைத்துக் கொண்டு அரையாப்பு கொருக்கு முதலிய விரணங்களுக்கு மேல்பூச ஆறியுலரும்

சர்வ பருவுகளுக்கும் பத்து.

கலிவிருத்தம்.

கண்டுரற்கருங்கல் லறைத்தேயதில்
அண்டுநல்லெல்லம் அவ்விடை தூக்கியே
ரெண்டுங்கூட்டி ரிணமதில்பத்திடில்
பண்டுமீறும் பருவுடைந்தோடுமே.

இதுவுமது.

ஓடுமஞ்சிழுவுளன் முளையற்றபின்
காடுமேமுருங்க யிலைச்சார்பிழிந்
தோடுமேல்லிய சீலையி லூட்டியே
போடுமருந்து பொழிந்திடச்சாடுமே.

வெட்டுபுண்களுக்கு கட்டுமருந்து.

சாடுங்கோடைக சாலையிலைபரி
தேடும்வேண்டியே தேயிருநேரமும்
மாடுங்கையினுல் தாக்கியீரைந்துநாள்
போடுமேல்வெட்டு புண்ணுறிக்கண்டதே.

சர்வரிணங்களுக்கும் அக்னி பிளாஸ்திரி.

பொய்யாதுமாந்தர்க்கு புகலுவேன்வாகடம்
அய்யர்பிளாஸ்த்திரி அரையுவேன்வகையுடன்
மெய்யாவீர மிராகனிருபது
தொய்யாவிளக்கெண்ணை துவளவரைத்திடே.

இதுவுமது.

அரைத்துச்சல்லாவிலழிந்தடப்பூசியே
விரைத்தகிரந்திபுண் விரும்ரணத்திற்கு
உரைத்தப்படியாக வுரிதியான்பூட்டிடில்
கரைத்தரணங்களுங் காணுமலோடுமே.

சர்வரணத்திற்கும் உட்கொள்ளவும் மேற்பூசவும் பவுத்திரத்திற்கும் பற்றிடவும் மருந்து.

வெளுத்தவெண்ணையும் வெண்ணெச்சிப்புங்குடன்
வளுத்தபூவும்வரிந்திவகையொன்று
இனித்தசார்படியெள்ளெண்ணெய்தான்படி
பளிக்கைத்துத்தமும் பாங்குடன்கேந்தியே.

இதுவுமது.

ஆணசூதம் வெட்பாலைம்பரங்கியும்
மாணசெந்தூரமானவ லிங்கமும்
காணவேக மடக்கடிதீபத்தில்
பாணமாயெடுத்திருநேற மருந்திடே.

இதுவுமது.

வருந்திசூலை வரும்வெடிப் போக்கிடும்
புருந்துதொண்டையும் பொற்சுதைசிங்கியும்
மறிகிரந்திபு மாறுதப்புண்களும்
பறிபரங்கியும் பகர்குஷ்டமேகுமே.

சர்வ இரணங்களுக்கு முட்கொள்ளும் யெண்ணெய்.

சதுரக்கள்ளிவேர்	பலம்	அரை
கோடிவேலிவேர்	,,	,,
எருக்கன்வேர்	,,	,,
கொடிக்கள்ளிவேர்	,,	,,
சிததிரமூலம்வேர்	,,	,,
அமுக்குராம்வேர்	,,	,,
சூதம்	,,	வ
கெந்தி	,,	,,
செந்தூரம்	,,	,,

இந்த ஒன்பது தினுசுகளையும் நிறுத்தெடுத்துப் பொடித்து ஒரு படி சித்தாமணக்கெண்ணெயில் போட்டு அடுப்பேற்றி யெறித் துக்காச்சி பதத்திலிரைக்கிவடித்து வைத்துக்கொண்டு காலையில் ஒரு சிறுகரண்டி வீதம் 3 நாள் உட்கொள்ள சகல ரணங்களும் ஆறியுலரும். இச்சாபத்தியமாகக் கொள்ளவும்.

அரையாப்பு முதலான இரணங்களுக்குக் களிம்பு.

லிங்கம்	பலம்	வ
மிருதார்சிங்கி.	,,	வ
ரசகர்ப்பூரம்	,,	வ
வெள்ளைகுங்கிலியம்	,,	வ
கடுக்காய்	,,	வ

மாசிக்காய்	பலம்	வ
காசுக்கட்டி	,,	வ
தான்றிக்காய்	,,	வ

இந்த எட்டு தினுசுகளையும் நிருத்தெடுத்துக் கல்வத்திலிட்டு பொடித்து பசும்வெண்ணைசேர்த்து மைபோல் அரைத்து வழித்து தண்ணீரில் ஒருநாள் மெதக்கப்போட்டு மறுநாள் யெடுத்து இரணங்களின் மீதுப்போட்டுக் கொண்டுவர கூடியசீக்கிரத்தில் ஆறியுலரும்.

நெடுநாள்பட்ட விரணம் ஆரமருந்து.

நெடுநாள்பட்ட விரணங்களின் மீது விளிம்பைச் சுற்றிலும் மெதுவாய் துரிசை பூசிக்கொண்டுவந்தால் கூடிய சீக்கிரத்தில் ஆறியுலரும்.

இதுவுமது வேறுமுறை.

மூன்று கிறேயின் துரிசை ஒரு அவுன்சு தண்ணீரில் கலக்கி தினம் இரண்டுதரம் புண்களில்விட்டுப் பின்பு மூன்று அல்லது நாலு நாளைக்கொருதரம் துரிசியின்யிடையை ஒவ்வொரு கிறேயின் வீதம் வியாதிக்காரனின் உணர்வுபோல் அதிக நோவும் சூடும் இல்லாமல் சிற்றெரிவும் உஷ்ணமும் மாத்திரம் கொடுக்கும்படியாய் 1 அவுன்சு தண்ணீரில் 10 கிறேயினுருகுமட்டும் அதிகரிப்பித்துக் கொள்ளவேண்டும். அதில் அதிக யெறிவுண்டானல் துரிசின் காரம் குறையும்படி சற்றதிகமாய்ச் சலத்தைக் கூட்டிக்கொள்ளவேண்டும். மேற்படி சலத்தைக் காலமேயும் சாயந்திரமும் புண்களில்விட்டு இடைவேளைகளில் அரிசிப் போல்டீசைக் கட்டவேண்டும். துன்மாமிசத்திற்கு அதின் மேல் துரிசை மூன்று அல்லது நாலுதினத்திற்கு ஒருதரம் தடவ வேண்டும். பிராயமானவர்களுக்காவது வாயினுள் வரும் புண்களுக்கு 5 கிறேயின் துரிசை நேர்மையாய் தூள்செய்து அரை அவுன்சு தேனில் கலந்து விரலால்தொட்டு யிடவேண்டும். பிள்ளைகளுக்கும் பாலர்களுக்கும் காணும் கண்ணோய்களுக்கு ஒரு கிறேயின் துரிசை ஒரு அவுன்சு சலத்தில் கலக்கி தினம் மூன்று அல்லது நாலுதரம் கண்ணைக் கழுவினல் குணமாகும். கடினமான கண்ணோய்களுக்கு ஒரு அவுன்சு தண்ணீரில் இரண்டு கிறேயின் துரிசைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

படர்தாமரைக்கும் தலைசொரிக்கும் மருந்து.

துரிசின் தூள்	கிரேயின்	20
மாசிக்காய் தூள்	அவுன்சு	1
மெழுகு பிளாஸ்திரி	,,	1

இந்த மூன்று தினுசையும் ஒன்றாய்சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு சொரியுள்ள தலையில் நன்றாய்த் தேய்த்துவர சொரியானது மாறும். படர்தாமரைக்கும் இவ்விதமே தேய்க்கவேண்டும். சொரி சிரங்குக்கு ஒரு அவுன்சு துரிசை அரைப்புட்டி தண்ணீரில் கலக்கி பூசவேண்டும். நமச்சலடங்கும் சொரியானது மாரும்.

அட்டை கடிக்கு மருந்து.

அட்டையானதுக் கடித்தவாயில் நின்று இரத்தம் போகிறதற்கு கொஞ்சம் துரிசை தூள்செய்துக் கடிவாயில் வைக்க நிற்கும்.

மூக்கில் வரும் ரத்தம் நிற்க.

மூக்கினிடமாக நின்று மிகுதியாய் இரத்தம் போகிறதற்கு 4 கிரேயின் துரிசை ஒரு அவுன்சு தண்ணீரில் கலக்கி மூக்கினுள் விடவேண்டும். ஆனால் இதுப்படிகாரத்திற்கு தாழ்ச்சியாய் யிருக்குமென வறிக.

பக்கப்பிளவைக்கும் தசையழுவிய புண்களுக்கும் மருந்து.

பக்கப்பிளவைகளுக்கும் தசையழுகியப் புண்களுக்கும் அசற்றுள்ள புண்களுக்கும் வியாதிக்காரனின் மனம்போல குளிர்ந்த சலமாவது வென்னீராவது இரண்டு மூன்று சட்டிகள் நிறைய எடுத்து வைத்துக்கொண்டு அதை ஒரு செம்பிலாவது கெண்டியிலாவது எடுத்துப் புண்ணின்மேல் தொடர்ந்த தாரையாய் விடவேண்டும். இப்படி தினந்தோறும் இரண்டுதரஞ் செய்யவேண்டும். இதினால் மிகுந்த அசரு யெடுக்கப்படுகிறது மன்றி சில நாளானவுடன் புண் சவுக்கியப்பட ஆரம்பிக்கும். புண் காலிலாவது கையிலாவது யிருக்குமாகில் நோயாளிதான்தானே சலத்தை விட்டுக்கொள்ளலாம் முதுகிலாவது கழுத்திலாவது உண்டாயிருக்கில் வேரே ஒரு மனிதனைக் கொண்டு செய்விக்கவேண்டும். சலத்தைப் புண்ணின்மேல் ஒன்றிரண்டு அடி உயரத்தில் நின்று விடவேண்டு. அசரு முற்றும்நீங்கி

புண் சிவப்பாயும் சவுக்கியமாகிற இலட்சணமுடையதாயும் காணும் பொழுது சலத்தை நிறுத்தி புண்களில் மெழுகு பிளாஸ்திரியை யிடவேண்டும் சலம்விடுகிறது குறைந்தாலும் ஒரு மணிநேரம் வரையும் விடவேண்டும் இடநேரங்களில் கள்சேர்ந்த போல்டிசை வைத்துக்கட்டவேண்டு மென்வறிக.

மூத்திரம் அடப்பு நிவாரணமாக.

மூத்திரம் போகாமல் தடைப்பட்டிருக்கின்றதற்கு சீலையை சுடு தண்ணீரில் தோய்த்து வியாதிகாரன் சகிக்கத்தக்கதான சூட்டோடே வயற்றின்மேலும் அடிவயற்றின்மேலும் இட்டு ஆறிப்போகிற பொழுதெல்லாம் வேறே ஒருச்சீலையைச் சுடத்தண்ணீரில் தோய்த்து இப்படி அடிக்கடி மாற்றிமாறி இடவேண்டும்.

வேறுவித பிரயோகம்.

மூத்திரம் போகாமல் தடைப்பட்டிருக்கின்றவர்களுக்கு ஒரு தொட்டியிலாவது பாந்திருக்கப்பட்ட பருஞ்சட்டியிலாவது கிடைக்குமாகில் அதில் சுடத்தண்ணீரைவிட்டு நோயாளியைப் பார்த்து அல்லது இருபது மின்னிட்டுநேரம் சலத்தில் உட்காரவைத்திருக்கவேண்டும். இப்படி செய்தால் மூத்திரமானது உடனே போகும் பாதை தீரும்.

தொண்டைபுண் நிவாரணமாக.

சகலமான தொண்டைப் புண்களுக்கு சுடுதண்ணீரில் ஆவியை உள்ளுக்குச் சுவாசம் வாங்கினால் அதிக குணம் உண்டாகும் ஆனால் சளித்தன்மையுள்ள வெண்டைக்காய்களில் 12 அல்லது அதிலதிகம் எடுத்துத் துண்டுகள்செய்து சலத்தில் வேகவைத்து அந்த சலத்தின் ஆவியைச் சுவாசம் வாங்கினால்பலன் அதிகரிக்கும் மேற்படி சலத்தை வாய் சுரிங்கின பாத்திரத்தில் விட்டி அதினாவி தொண்டையிலுள் நன்றாய்ச் செல்லும்படி வாயை பாத்திரத்தின் வாயின்மேல் அடுத்து வைத்துச் செய்யில் தொண்டை புண் ஆறும்.

அட்டைவிடும் விதம்.

அட்டைகளை தகுந்த வியாதிகளுக்குத் தக்க சமயம் பார்த்து முறையாய்விடுகில் அனேக வியாதிகளுக்கு உபயோகமாக விருக்கும் ஆனால் அவைகளை விடுகிறதில் சாக்கிரதை அவசியமானதாயிருக்கின்றது.

அவைகளை கடிக்கப் பண்ணுவதற்கு இரண்டுமாதிரி உண்டு முதலாவது ஒவ்வொரு அட்டையாகக் கையில்பிடித்து வேண்டியது கையளவும் கடிக்கவிடவேண்டும் இது மிகுந்த சலிப்பும் தாமதமுள்ள விதமற்ற நல்ல மாதிரி எப்படி யென்றால் தேவையான அட்டைகளை ஒரு கிளாசு பாத்திரத்திலாவது கோப்பையிலாவது இட்டுக் கடிக்க வேண்டியஸ்தலத்தில் கவித்துப் பிடித்திருக்கவேண்டும் சற்று நேரஞ் சென்றபின் அதை நீக்கினால் அட்டைகள் கடித்துக்கொண்டு இருக்கின்றதைக் காணலாம் கிளாசு பாத்திரமாவது கோப்பையாவது ஆசரில்லாவிட்டால் முதற் சொன்னபடி ஒவ்வொரு அட்டையாகக் கையிற் பிடித்துக் கடிக்கவேண்டிய ஸ்தலம் தப்பாமல் விடவேண்டும்.

அட்டையை விடவேண்டிய பக்கத்தில் சவுக்காரத்தைத் தேய்த்துச் சுடுதண்ணீரால் நன்றாய்க் கழுவித்துடைத்துப் பின்பு விடுகில் உடனே கடிக்கும் இப்படிச் செய்தும் உடனே கடியாவிட்டால் 15 அல்லது 20 மினிட்டு நேரம் உலர்ந்த அழுக்கில்லாத சீலையிலிட்டு மேலுள்ள இரத்தத்தைப் போக்கினதின் பின்புவிடவும் இதிலும் கடியாவிட்டால் தோலின்மேல் பாலைத்தடவியுட அதின் பின்னும் கடியாவிட்டால் தோலின்மேல் கொஞ்சங்கீரி அதில் நின்றுவரும் இரத்தத்தைக் கடிக்கவேண்டியது ஸ்தலமுழுவதும் பூசியும் விட்டாற் கடிக்கும் எந்த விதங்களிற் கடியாமலிருக்கினும் கடைசிப்பிரையோகத்தால் நிச்சயமாய்க் கடிக்கும்.

அட்டைகள் இரத்தங் குடித்து 15 அல்லது 20 மின்னிட்டுக் கழிந்தபின் விழாவிட்டாலும் வேண்டியபோது அவைகளை நீக்கி விடவேண்டுமானாலும் கொஞ்சம் உப்பைத் தூவவாவது காடியைவிடவாவது செய்தால் உடனே விழும்.

அட்டை கடித்த முறிவில் நின்று இரத்தம்போனது போகாதிருந்தால் சுடுதண்ணீரால் ஒற்றிடங் கொடுக்கவேண்டும்.

இரத்தம் மிகுதியாய்ப் போகிறதை நிறுத்த வேண்டுமானால் முறிவின் மேல் விரலாலழுத்திப் படிகாரத் தூளையாவது துரிசின் தூளையாவது வைக்கவேண்டும்.

அட்டைகள் மூலத்துவாரம் மூக்கின் துவாரம்மற்றெந்தத்துவாரத்தினுள்ளாவதுள்ளாவது ஏறிவிட்டால் உப்புதண்ணீவது காடியாவது உள்ளுக்குச் செலுத்த உடனே வெளியாகி விழும்.

முக்கியமாய்க் கழுத்தில் பொருமிக்கா ணும் நரம்பின்மேல் அட்டைகள் விடக்கூடாது.

நோயுள்ள கட்டிகளின்மேல் விரலை வைக்கும்பொழுது நாடியடிக்குமானால் அதின்மேல் அட்டைகளைவிடாமல் அவற்றின் சுற்றில் சற்றுதூரம் தள்ளிவிட வேண்டும்.

கண்ணிமைகளிலாவது ஸ்திரீகளின் தனத்திலாவது ஆண் குறித்தோளின்மேலாவது அட்டைகளை விடுகிற சில சமயத்திற் யெறிவந்தமுண்டாகு மாதலால் அந்த ஸ்தலங்களில் விடக்கூடாது.

குழந்தைகளுக்கு அட்டைகளைவிட்டால் பிராயமானவர்களைப் பார்க்கினும் மிகுதியாய் இரத்தம் போகும் ஆனதால் மிகுந்த பத்திரம் வேண்டி யிருக்கின்றது எப்பொழுதும் அட்டைகளை தேகத்தில் எவ்விடங்களிற் கூடியமட்டும் மாமிசங்குரைந்து எலும்பு மேற்பட்டு யிருக்கின்றதோ அந்தஸ்தலங்களைப் பார்த்து விடவேண்டும் இப்படிச் செய்கிறது ஒரு வேளை ரத்தம் விடாமல் பாயுமாகில் அதை நிருத்தும் பொருட்டாய் அழித்திப் பிடிக்கிறதற்குப் இசைவாயிருக்கும் எப்பொழுதும் குழந்தைகளுக்குக் காலையில் விடவேண்டும். சூரியன் அஸ்தமித்த பின்பு ஆனால் இராத்திரி எல்லாரும் தூங்குஞ்சமயத்தில் கடிவாயில்நின்று அதிக இரத்தம்பாய்ந்து குழந்தைகள் மறிக்கிற தற்கு யேதுவாயிருக்கும்.

குழந்தைகளின் வயசுக்குத்தக்க அட்டையின் எண்ணம் நிதானிக்க அவசியமானதால் கீழ்யெழிதியப்படிக்குச் செய்ய வேண்டும்.

ஆறுமாதத்தின் கீழ்ப்பட்டக் குழந்தைகளுக்கு ஒரு அட்டை விடவேண்டும்.

ஒரு வருஷத்திற்குக் கீழ்ப்பட்டக் குழந்தைகளுக்கு இரண்டு அட்டைவிடவேண்டும்.

இரண்டு வருஷத்திற்குக் கீழ்ப்பட்டக் குழந்தைகளுக்கு மூன்று அட்டை விடவேண்டும்.

மூன்றுவருடத்திற்குக் கீழ்ப்பட்டக் குழந்தைகளுக்கு நாலு அட்டை விடவேண்டும்.

ஆனால் தலைநோவுடன் வரும் சுரங்களுக்கு அட்டைகள் மிகுந்தப் பிரயோகமா யிருக்கின்றன வியாதியின் துவக்கத்தில் பிணியாளி

வாலிபனும் பெலவானும் இருப்பானாகில் நெற்றியொன்றில் 4 அல்லது 6 அட்டைவிடவேண்டும். பிடரியின் மேற்பக்கத்திலும் கடிக்கவிட்டால் அதிக குணங்கொடுக்கும் சுரத்துடனே மார்பிலும் வயற்றிலும் கடினமான வலிகளுக்கு 8 அல்லது 10 அட்டைகளை உடனே வலியின் மேல் விடவேண்டும்.

மூலமுளையின் இரத்தப்போக்கு நின்றகாரணத்தால் வருந் தலையிடிக்கு மூலத்துவாரத்தினருகே அட்டையைக் கடிக்கப்பண்ணினால் குணப்படும் அட்டைகள் மூலத்துவாரத்தினுள் ஏறிப்போய் விடாமல் எச்சரிக்கையாக யிருக்கவேண்டும்.

சூதகம் சடுதியாய்நின்ற காரணத்தாலுண்டாகும் தலைநோவுக்கு அட்டைகளை உள்துடையில் விடவேண்டும்.

விப்புருதிகள், பருக்கள், அரையாப்புகள், நசிவுகள், சுளுக்குகள் கடிகள் மற்றும் தோலின்மேல் வரும் இரத்தச்சுருப்புகள் இவைகளின் ஆரம்பத்தில் வலியுஞ் சூடும் அதிகமா யிருக்கும் பொழுது 6 அல்லது 8 அட்டைகள் விட்டு சுடுதண்ணீரால் ஒத்திடங் கொடுத்தால் வலிதீர்ந்து வியாதியைப் போக்கும்.

அரையாப்புகளுக்கு முக்கியமாய் ஆரம்பத்தில் அதிகவேதனை இருக்கிறபொழுது பிரயோசனமாம்.

கக்கிருமல் தொடங்கினபொழுது பிடரியின் மேற்பக்கத்தில் அட்டையை விட்டால் மிகுந்தபலனா யிருக்கும். செய்யவேண்டிய முறைமை யெவ்வித மெனில் குழந்தைகளின் வயசு ஒன்றுக்கு ஒவ்வொரு அட்டை வீதம் முறையாய்க்கூட்டி ஆறுவயது வரை விடலாம் அப்புரம் எத்தனை வயதாயிருக்கினும் ஆறு அட்டையே போதுமானதா யிருக்கின்றது ஆனதால் இப்படி விட்டு அட்டைகள் விழுந்தபின் ஒரு கடுகு போல்ட்டீஸ் ஆவது ஒரு சின்ன பிளிஸ்டர் ஆவது செய்து கடிவாயை விட்டுவிட்டு இரண்டு தோள் பட்டைக்கும் நடுவில் வைத்துக் கட்டவேண்டும். அட்டைகளையும் கடுகு போல்டீசையும் மறுபடியும் அவசியம் போல் இட்டுக்கொள்ள வேண்டும்.

அநேகவிதக் கண்ணோய்களுக்கு அதிகசூடும் வலியும் வீக்கமும் சிவப்பு மிருக்கிற பொழுது 4 அல்லது 6 அட்டைகளைக் கடைக்கண்களின் அருகேயிருக்கும் பொட்டுகளில் விட்டால் பலனைக் கொடுக்கும் வியாதியானது சொஸ்தமாகும்.

சர்வ படைகளுக்கு மேற்பூசும் மாத்திரை.

கெந்தகம்	பலம்	௧
ரசம்	,,	வ
குங்கிலியம்	,,	௩
முருதாருசிங்கு	,,	வ

இவைகளுடன் சீமைஅகத்தி பொன்னகத்தியிலைப் போதுமான வரைக்குஞ்சேர்த்து மேற்படி மருந்துகளை கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து சுண்டக்காய்ப் பிரமாணம் மாத்திரைகள் செய்து உலர்த்தி வைத்துக்கொண்டு தாமரைப்படை, யெச்சைப்படை, கடுவன், அரைக்கடுவன் குழந்தைக்கணுக்கால் கடுவன் மங்கு மூக்கின்மேல் வரும் புண்களுக்கு இந்த மாத்திரையை வெள்ளாட்டுப்பால் அல்லது எலுமிச்சம் பழஞ்சார் இவைகளை விட்டு உரைத்துமேல் போட்டுக் கொண்டுவர குணமாகும்.

நெடுநாள்பட்ட நாற்றமுள்ள படர்புண்களுக்கு சேர்வை சீலை.

நுண்மையாய்த் தூள்செய்த படிகாரம் 8 கிராம் காசுக்கட்டி 2 கிராம் அபின் ஒருகிராம் மெழுகு பிளாஸ்திரி 2 அவுன்சு இவையில் அபினி முன்னுக பிளாஸ்திரியுடன் நன்ருய்க் கலந்துக்கொண்டு பின்பு மற்ற மருந்துகளை யெல்லாம் கூட்டி அரைத்து இதை ஒரு துண்டுச் சீலையில்தடவி காலையிலும் சாயந்திரமும் புண்ணிலிடவேண்டும் வேதனையை யுண்டாக்குமாகில் மேற்படி சேர்வையின் காரத்தைக் குறைக்கும்படியாய் மெழுகு பிளாஸ்திரியை அதிகரித்துக் கூட்டிக்கொள்ள வேண்டும். இரணங்களில் அதிகமாய் வளரும் துர் மாமிசங்களுக்குப் பொரித்த படிகாரத்தூளில் கொஞ்சந்தூவினுல் சதைகரையும்.

மூட்டுவீக்கங்களுக்கு சீலை.

மூட்டு வீக்கங்களுக்கும் அடிச தைகளுக்கு இவையின் காரணத்தால் உண்டாகிற வீக்கங்களுக்கும் அரை புட்டிக் காடியும் அவ்வளவு சாராயமும் ஒன்ருய்க் கலந்து 4 கிராம் படிகாரத்தைக் கரைத்து அதில் சீலையை நனைத்து மேற்படி வீக்கங்களின்மேல் போட்டுக் கொண்டுவர குணமாகும்.

இரணவைத்தியம் முற்றிற்று.

இரண்டாமத்தியாயம்.

கண்டா அவிழ்த மஞ்சரி.

சர்வரெணங்களுக்கும் உட்கொள்ளும் யெண்ணெய்.

கொடிக்கள்ளிவேர்	பலம்	௨
சித்திரமூலம்வேர்	,,	௨
எருக்கன்வேர்	,,	௨
அமுக்கனுங்கிழங்கு	,,	௨
பாதரசம்	விராகனிடை	௨ஹ
ரசசெந்தூரம்	,,	௨ஹ
கெந்தகம்	,,	௨ஹ

இவைகளை நிருத்தெடுத்து வேறு வகையாவும் இடித்து சூரணித்து மற்ற சரக்குகள் யாவும் கல்வத்திலிட்டு விளக்கெண்ணெய் வார்த்து இரண்டு ஜாமம் அரைத்து ஒரு மண் பாண்டத்தில் அரைபடி வெளக்கெண்ணை வார்த்து வீசம்படி கொடிக்கள்ளிச்சார்விட்டு மருந்தை அதில்போட்டுக் கலக்கி களச்சி சார் வீசம்படிவிட்டு அடுப்பேற்றி யெறித்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்துவைத்துக் கொண்டு காலையில் உச்சிக்கரண்டி வீதம் 5 நாள் அல்லது 7 நாள் சாப்பிடவும் சகல விரணங்களுமாறும் இச்சா பத்தியம் அரை காரம் சேர்க்கவும் சுட்ட புளி வறுத்த உப்புச் சேர்ப்பதே மிகவும் உத்தமமெனப்படும்.

பக்கசூலை கெர்ப்பசூலைக்கு உட்கொள்ளும் யெண்ணை.

முளகரணை யிலையை உரலிலிட்டு ஜலம் வார்த்து இடித்து 6 பலம் ரசம் பிழிந்துக்கொண்டு அதில் 6 பலம் சித்தாமணக்கெண்ணை விட்டு உரித்தெடுத்த பூண்டு திருகு 2 பலம் சேர்த்து அடுப்பேற்றி யெறித்துக் காய்ச்சி வடித்துவைத்துக்கொண்டு திரேகதிடப்படி 3 நாளைக்குக் காலையில் உச்சிக்கரண்டி வீதங்கொடுத்துவர பேதியாகும் பேதியதிகமானல் நோய் நீங்கினதென்று தெரிந்துக் கொண்டு யெண்ணெய் நிறுத்திவிடவும் இச்சாபத்தியம்.

கைகால் பிடிப்புக்கு உட்கொள்ளும் யெண்ணெ.

சுத்திசெய்த வாளம்	விராகனிடை	உ
ஏலம்	,,	க
சுக்கு	,,	க
பூரம்	,,	க

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு விளக்கெண்ணெய் வார்த்து அரைத்து ஒரு பாண்டத்தில் அரை பலம் புங்கம்பாலும் அஞ்சி பலம் வெளக்கெண்ணெயும் விட்டு அரைத்த மேல்படி மருந்தை யெண்ணெயில் கலக்கி மூன்றுநாள் சூரிய புடம் வைத்து யெடுத்து வைத்துக்கொண்டு காலையில் உச்சிக்கரண்டி விதம் 5 நாள் அல்லது 7 நாள் சாப்பிடவும், கைகால் பிடிப்பு தீரும் சுட்ட புளி வருத்த உப்பு கூட்டவும்.

அச்சரத்திற்கு யெண்ணெ.

புளிகருணைக்கிழங்கு	பலம்	௧
வசம்பு	,,	௧
வெள்ளெருகு	,,	௧
வெங்காயம்	,,	௧
நஞ்சறுப்பான்வேறு	,,	௧
நிலப்பனங்கிழங்கு	,,	௧
பெருங்கிழங்கு	,,	௧
தும்பமராஷ்டகம்	,,	௧
கருஞ்சீரகம்	,,	௧
கடுகுரோகணி	,,	௧
காட்டுக்கருணைகிழங்கு	,,	௧
ஆத்துதுமட்டிக்காய்	,,	௧
சவுரிக்கிழங்கு	,,	௧

இந்த பதிமூன்று தினுசுகளையும் பஞ்சுபோலிடித்து அரைபடி வெளக்கெண்ணெயில் போட்டு அடுப்பேற்றிக்காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு காலையில் உச்சிக்கரண்டிவிதம் சாப்பிடவும் 4, 5 விசை பேதியாகும். அதிகமாய் பேதியானல் ஓமங்கொண்டுவந்து வென்னீரில் அரைத்து பால்பிழிந்து ஒரு பாலாடை அல்லது

இரண்டுபாலாடை சாப்பிட பேதிநிற்கும். ஆனல் யெண்ணெய் 3 நாள் கொடுக்கவும் பத்தியம் சுட்டபுளி வருத்த உப்பு சேர்க்கவும் சிறுபிள்ளையானல் தாய் பத்திய மிருக்க வேண்டும்.

கொருக்குவெள்ளைக்கு யெண்ணெய்.

பூரம்	விராகனிடை	௧
ஓமம்	,,	௧
ஏலம்	,,	௧
லவுங்கம்	,,	௧

இந்த நாலு தினுசுகளையும் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு செம்பரித்துச் சார்விட்டு மைனம்போல் 4 ஜாமம் அரைத்து உ௦ பலம் வெளக்கெண்ணெயில் கலக்கி ஒருநாள் சூரியபுடம்வைத்து மருநாள்முதல் காலையில் உச்சிக்கரண்டிவீதம் 5 நாள் அல்லது 7 நாள் சாப்பிடவும் கொருக்குவெள்ளை முதலான நோய்தீரும். இச்சாபத்தியம் மருபத்தியமும் அவ்வாறே யிருக்கவேண்டும்.

அயத்தெண்ணெய்.

அயம் பலம் 1 எலுமிச்சம்பழம் 15 அறுத்து உப்பு வைப்பது போல் அயத்தையுள்ளேவைத்து ஒருவீசை சாம்பிராணி பூண்டென்கிற பிரமிவழுக்கையைச் சுத்தஞ்செய்து பேர்பாதியாக்கி ஒருபெரிய பாண்டத்தில்போட்டு ௬௦ படி ஜலம்விட்டு மேற்படி பழத்தைவைத்து அதில்,

வெள்ளைவெங்காயம்	பலம்	௪
சுக்கு	,,	௨
கடுக்காய்தோல்	,,	௨

இவைகளைப் பொடித்து மேல்தூவி பின்பேர்பாதி யிலையை மூடி அசையாமல் அடுப்பேத்தி தினமொன்றுக்கு இரண்டுநாழிகை ஒன்பதுநாள் யெறிக்கவும் சிதரச்சுண்டினபிறகு நன்றாய்பிசைந்துக் கிட்டியால்பிழிந்து சரிஎடை சித்தாமணக்கெண்ணை சேர்த்து மெழுகுபதங் காச்சவும் அரையணையிடை பிரமாணம் சாப்பிட்டு இரண்டுநாழிகை

பொருத்து தயிர்சாதம் சாப்பிடவும். தீரும் வியாதிகள் பித்தம் நாற்பது தலைச்சுண்டு தலைப்புத்து தலைநடுக்கல் தேகநடுக்கல் காமாலை தலைமயிர் விழுந்து போகிறது கால்கை அசதி பித்தபாண்டு முதலியவைகள் நீங்கும் விந்துகட்டி பலம் அதிகமாகும் இச்சாபத்தியம்.

குழந்தைகட்டு மாந்தயெண்ணெய்.

சன்னுசி கிழங்கென்று சொல்லுகின்ற செம்பிரண்டை நெடுங்கொடியாய்ப்படராத குருங்கொடியின் கிழங்கு முள்ளங்கிக்கிழங்கு போலிருக்குமதை பில்லை பில்லையாக திருத்தியதை பலம் 25.

வெங்காயம்	பலம்	௰
உரித்தவெள்ளை பூண்டு	,,	௨௫
சித்தாமணக்கெண்ணை	வீசை	கவ

இவை நான்கையுஞ் சேர்த்து அடிப்பிலிட்டு துடிப்பினால் துழாவச் சிலங்கை சப்தத்தில் யெடுத்து வடித்து வைத்துக்கொண்டு அதில்,

கரிமஞ்சள்	பலம்	௧
வெந்தயம்	,,	௧
கார்ப்போகவரிசி	,,	௧
வெட்பாலையரிசி	,,	க
கருஞ்சீரகம்	,,	௧

அதில் இவைகளை யெளம்வருப்பாய் வருத்து வடிகட்டி ஷடியெண்ணெயில் கலக்கிக் குழந்தைகளுக்கு ஒரு வீசை ஒரு கரண்டி கொடுத்தால் மாந்தம் அணுகாது இச்சாபத்தியம்.

கரப்பாணெண்ணை உள்ளுக்கும் மேற்பூசுக்கும்.

கார்ப்போகவரிசி	பலம்	௧
சீரகம்	,,	௧
வெட்பாலையரிசி	,,	௧
கருஞ்சீரகம்	,,	௧
ஏலம்	,,	௧
கம்பிப்பிசின்	,,	௧
கடுகுரோகணி	,,	௩௰

இவைகளையும் பொடித்துச் சிறுதுத்திவேர் பட்டை பலம் 5 நையத்தட்டி வெளக்கெண்ணெய் படி அரைவிட்டு மேற்படி சரக்குகளையுஞ் சேர்த்துக் கல்வத்திலிட்டு ஒரு ஜாமம் நன்றாய் அரைத்து மூன்று நாள் சூரியபுடம்வைத்து உள்ளுக்குங்கொடுத்து மேலுக்கும் பூச மண்டைக்கரப்பான் கைகால் ரணம் உப்பு போலுதிர்ந்துபோம். இச்சாபத்தியம்.

சகல சுரத்திற்குங் கியாழம்.

சுக்கு	பலம்	வ
மிளகு	,,	வ
சிறுதேக்கு	,,	வ
பேய்ப்புடல்	,,	வ
தூதுவேளை	,,	வ
சித்திரமூலம்	,,	வ

இந்த ஆறுதினுசுகளையும் நிருத்தெடுத்து கருக்கி ஒருபடி சலத்தில் போட்டு கால்படியாகச் சுண்டக்காய்ச்சி 3 நாள் 6 வேளைச் சாப்பிட சகல சுரமுந் தீரும்.

வேறுமுறை சுரத்திற்குக் கியாழம்.

பேராமுட்டி	பலம்	வ
சிறுதேக்கு	,,	வ
சித்திரமூலம்	,,	வ
திப்பிலி	,,	வ
மிளகு	,,	வ

இந்த ஐந்துதினுசுகளையும் நிறுத்தெடுத்து தட்டி ஒருபடி ஜலத்தில்போட்டு கால்படியாக சுண்டக் காய்ச்சி 3 நாள் 6 வேளை சாப்பிட சர்வ சுரங்களும் பறந்துபோகும் பத்தியமில்லை.

வேறுமுறை சுரத்திற்குக் கியாழம்.

சீந்திற்கொடி	பலம்	வ
விலாமிச்சம்வேர்	,,	வ
பர்ப்பாடகம்	,,	வ
கோரைக்கிழங்கு	,,	வ
சிறுதேக்கு	,,	வ

சந்தணம்	பலம்	வ
நன்னாரிவேர்	,,	வ

இந்த ஏழு தினுசுகளையும் நிருத்தெடுத்து இரண்டுபடி ஜலத்தில் போட்டு அரைபடியாகச் சுண்டக் காய்ச்சி 3 நாள் 6 வேளை சாப்பிட சுரமானது நீங்கும்.

பித்தத்திற்குக் கியாழம்.

சீரகம்	பலம்	வ
சுக்கு	,,	வ
பேய்பீர்க்கு	,,	வ
சீந்தில்கொடி	,,	வ
பர்ப்பாடகம்	,,	வ
கொத்தமல்லி	,,	வ

இந்த ஆறு தினுசுகளையும் தட்டிப்போட்டு ஒருபடி ஜலம் விட்டு காப்படியாகச் சுண்டக் காய்ச்சி காலை மாலை மூன்று நாள் சாப்பிட்டுக் கொண்டுவர தலை சுற்றலானப் பித்தமானது அகன்றுபோகும்.

மேகம் பாண்டு சூலை கிரந்தி குஷ்டம் இவைகட்கு பரங்கிப்பட்டை சூரணம்.

5 பலம் பரங்கிப்பட்டையை நிருத்தெடுத்து சூரணித்து அதற்குச் சரியிடை வெள்ளைசருக்கரைக் கலந்து ஒரு மண்டலம் 40 நாள் சாப்பிட்டுக்கொண்டுவர மேகம் இருபத்தியொன்றும் சூலை ஆறும் குஷ்டம் பதினெட்டும் கிரந்தியும் தீரும் ஆனால் பச்சையாகவும் அருந்தலாம்.

ஆறுவித மூலத்திற்கும் மருந்து.

காட்டுக்கருணைகிழங்கு	பலம்	க
கரிக்கருணைகிழங்கு	,,	க
காராக்கருணைகிழங்கு	,,	க
புளிக்கருணை	,,	க

இவைகளை அரைத்து ஆட்டுமோரில் கலந்து 3 நாள் சாப்பிட்டு வர மூலம் ஆறும் நீங்கும்.

பித்தத்திற்கு கியாழம்.

ஆற்றுமணலை ஒருபாண்டத்தில் வறுத்து அதின்மேல் முசுமுசுக்கையின் சார்பிழிந்து அரைபடி ஜலம் விட்டுப் பதமாகக் காய்ச்சி 3 நாள் சாப்பிட சர்வ பித்தமுந் தீரும் மயக்கம்போம்.

சர்வ வீக்கங்களுக்கும் கூழ்.

சங்கன்வேர்	பலம்	௧
பச்சரிசி	படி	௧

இவை இரண்டையு மிடித்து கூழுபோல் காய்ச்சி குடிக்க சகலமான வீக்கங்களும் வாடும் ஆனால் மோர்விட்டுக் காய்ச்சவும்.

நீர் கட்டுக்குக் கியாழம்.

பூனைக்கீரை	பலம்	வ
நெரிஞ்சல்	,,	வ
சிறுகீரை	,,	வ
வெள்ளிரிவிரை	,,	வ

இவைகளை ஒருபடி நீரில்போட்டு கால்படியாகச் சுண்டக் காய்ச்சி காலை மாலை யிருவேளையும் மூன்றுநாள் சாப்பிட்டுக்கொண்டு வர நீர் கட்டானது தீர்ந்து தாராளமாய் நீரானது யிரங்கும்.

நீரிழிவுக்கு கியாழம்.

ஆவாரம்யிலைதூள்	பலம்	வ
கல்மதம்	,,	வ
கொன்றைபட்டை	,,	வ
மிளகு	,,	வ

இவைகளை தட்டி ஒருபடி ஜலத்தில்போட்டுக் கால்படியாக வற்றக் காய்ச்சி காலை மாலை யிருவேளையும் சாப்பிட நீரிழிவு நீங்கும்.

மேக சுரத்திற்கு கியாழம்.

பனவெல்லம்	பலம்	வ
சுக்கு	,,	வ
நிலக்குமிழ்வேர்	,,	வ

இவைகளைத் தட்டி ஒருபடி ஜலத்தில்போட்டு காற்படியாக வற்றக் காய்ச்சி வடித்து சாப்பிட வெகுநாளாகத் தங்கியிருந்த மேக சுரமானது உடனே தீரும்.

தாது விருத்தி யுண்டாக.

சீனாகற்கண்டு	பலம்	உ
பேரீச்சம்பழம்	,,	உ

இவைகள் இரண்டையும் கல்வத்திலிட்டு தேன்விட்டு மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு காலை மாலை புன்னக்காயளவு சாப்பிட்டுக்கொண்டு வர வீரிய விருத்தியுண்டாகும்.

மேகத்திற்கு பச்சிலை.

வன்னியிலையை யருத்து அம்மியில் வைத்து மைபோல் அரைத்து யெருமை தயிரில் புன்னக்காய்ப் பிரமாணம் காலையில் 3 நாள் சாப்பிட மேகத்தினாலுண்டாகிய வியாதிகள் தீரும். கடும் பத்தியம்.

மேகம் 21-க்கும் மருந்து.

வேளை யொன்றுக்கு கால் பலம் சிறுகுரிஞ்சான் வேறு யெடுத்து மைபோல் அரைத்து ஆழாக்கு தேங்காய்ப் பாலில் கரைத்து மூன்று நாள் காலையில் சாப்பிட மேகம் இருபத்தொன்றுந் தீரும் இச்சாபத்தியம்.

வேறுமுறை மேகத்திற்கு மருந்து.

பரங்கி பட்டையை பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு வேளை யொன்றுக்கு இரண்டு காசியிடை ஆழாக்குப் பசும் பாலில் போட்டுக் காய்ச்சிக் குடிக்க மேகம் 21-ம் தீரும். இச்சாபத்தியம்.

சன்னிக்கு கியாழம்.

முருங்கையீர்க்கு	பலம்	வ
மாவிலிங்கம்பட்டை	,,	வ
நொச்சியிலை	,,	வ
பசுமுன்னை	,,	வ
ஈசுரமூலிவேர்	,,	வ

இந்த ஐந்து தினுசுகளையும் நிறுத்தெடுத்து அதில் தட்ட வேண்டியதைத் தட்டி ஒருபடி ஜலத்தில்போட்டு கால்படியாக சுண்டக் காய்ச்சி வடித்து காலை மாலை யிருவேளையும் சாப்பிட சன்னியானது அகன்றுபோம்.

சுரத்திற்குச் சூரணம்.

ஒரு பலம் புளியாரணையை நிறுத்தெடுத்து ஆவின்பாலில் அவித்து பொடியாக்கி வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொண்டு இரண்டு காசிபிடை சூரணத்தை தேனில் குழைத்துச் சாப்பிட சுரமகலும்.

பக்க வாதத்திற்கு கியாழம்.

சுக்கு	பலம்	வ
முக்காவேளை	,,	வ

இவை இரண்டையும் தட்டி அரைபடி ஜலத்தில் போட்டு அரிக்கால் படியாய் வற்றக்காய்ச்சி வடித்துச் சாப்பிட பக்கவாய்வு, குன்மம் இவைகள் தீரும்.

இருமல் சுவாசத்திற்கு கியாழம்.

தாதுவேளை	பலம்	வ
சங்கங்குப்பி	,,	வ
அதிமதுரம்	,,	வ

இவைகளை ஒருபடி ஜலத்தில் போட்டு காற்படியாக வற்றக் காய்ச்சி 3 நாள் 6 வேளை சாப்பிட இருமல், சுவாசகாசம் இவைகள் தீரும்.

காசத்திற்கு மருந்து.

ஒருபிடி பூனைக்காலி யிலையை பசும்வெண்ணெயில் அரைத்து ஒரு பாண்டத்திலிட்டு அடுப்பேற்றிக் கிளறி புன்னக்காய் பிரமாணம் 3 நாள் சாப்பிட, கசாரோகமானது அகன்றுபோகும்.

இருமல் க்ஷயத்திற்குக் கியாழம்.

இஞ்சி	பலம்	௨
வெள்ளெருக்கன்பூ	,,	௨
மிளகு	,,	௨

இவைகளைத் தட்டிப்போட்டு அரைபடி ஜலம் விட்டு அரிக்கால்படியாக வற்றக்காய்ச்சி காலை மாலை இருவேளையும் 3 நாள்சாப்பிட இருமல், க்ஷயந்தீரும்.

விக்கலுக்கு.

ஒரு பலம் சடாமஞ்சளை நிருத்தெடுத்து எலுமிச்சம்பழ ரசம் விட்டு மைபோல் அரைத்து தேனில் மத்தித்து 3 நாள் கொடுக்க விக்கல் நிற்கும்.

வேறு முறை விக்கலுக்கு.

மயிலிறகைச் சாம்பலாக்கி அதில் ஒரு துளி தேன்விட்டு நாக்கில் தடவிக் கொண்டுவர விக்கல் நிற்கும்.

வாந்தி நிற்கக் கியாழம்.

நெல்லிமுள்ளி	பலம்	௨
திப்பிலி	,,	௨
சீரகம்	,,	௨
நெற்பொரி	,,	௨

இவைகளை ஒருபடி சலத்தில் போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி 3 நாள் சாப்பிட வாந்தி நிற்கும்.

பாண்டுக்குப் பச்சிலை.

ஒருபிடி கரிசலாங்கண்ணியும் கால்பலம் மிளகுஞ் சேர்த்து

அரைத்து கடுக்காய் பிரமாணம் காலையில் மூன்றுநாள் கொள்ள பாண்டுரோகந் தீரும் இச்சாபத்தியம்.

பல்லு நோய்க்குக் கியாழம்.

வெள்வேலம்பட்டை	பலம்	அரை
குமிழ்பட்டை	,,	,,
ஆலம்பட்டை	,,	,,

இவைகளை தட்டி இரண்டு படி ஜலத்தில் போட்டு ஒரு படியாகச் சுண்டக்காய்ச்சி 3 நாளைக்குக் காலைமாலையுங் கொப்பளித்துவர பல்நோய் தீரும் பல் உறுதிபடும்.

கைகால் பிடிப்புக்கு நீர்.

வாதமடக்கி, நொச்சியிலை, பாவட்டை இவைகளை நீரிற்போட்டுக் காச்சி பிடிப்புகள் மேல்விட பிடிப்புவாங்கும். ஆனால் இம்மாதிரியாக முறையே எட்டுநாள் காலைமாலை வார்க்கவேண்டியது.

இரத்த காசத்திற்கு குண்டை.

ஆலம்விரை	பலம்	வ
அத்திவிரை	,,	வ
நாவல்	,,	வ
அரசன்விதை	,,	வ
நிலைப்பனங்கிழங்கு	,,	வ
மான்கொம்பு	,,	வ
முருங்கைப்பூ	,,	வ
தூதுளம்பூ	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்து பசும்பால் விட்டு மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு கெச்சக்காய் பிரமாணம் காலைமாலை பத்துநாள் தேன் நெய் இவைகளில் மத்தித்துச் சாப்பிட ரத்தகாசந் தீரும். இச்சாபத்தியம்.

கரப்பானுக்கு மேல்பூசு மருந்து.

ஏலம்	பலம்	வ
சுக்கு	,,	வ
சீரகம்	,,	வ

இவை மூன்றையும், பொடித்து கார்ப்படி நல்லெண்ணெயில் போட்டு ஒருநாள் சூரியபுடம்வைத்து மருநாள்யெடுத்து கரப்பான் மீதுப் பூசிக்கொண்டுவர ஆறியுலரும். ஆனால் மூன்றுநாள் பூசிக் கொண்டுவரவேண்டும்.

சிரங்குக்குப் பூசு மருந்து.

கருங்கம்பளியைச்சுட்டு நல்லெண்ணெயிற் குழப்பி சிரங்கு களுக்கு பூசிவர ஆறியுலரும்.

காசத்திற்கு சூரணம்.

இரண்டு பலம் பரங்கிசக்கையை யெடுத்து பசும்பாலில் அவித் தெடுத்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு காசி யிடை இரண்டு தேனில் மத்தித்துச் சாப்பிட காசம் பறந்து போகும்.

வயற்று வலிக்கு மருந்து.

தேங்காயைத்திரிகி பிட்டுவைத்து பர்பாடகத்தைப் பருப்பாக்கி இவை இரண்டையுங் கலந்து இருவேளையுந் தின்றுக் கொண்டுவர வயற்றுவலி தீரும். ஆனால் முத்தினதேங்காயாய் யிருக்கவேண்டும்.

மன்மத லேகியம்.

தென்னம்பூ	பலம்	அரை
பனம்பூ	,,	,,
செண்பகப்பூ	,,	,,
கடுக்காப்பூ	,,	,,
நிருகாறப்பூ	,,	,,
மாம்பூ	,,	,,
வசம்பூ	,,	,,

கிராம்பு	பலம்	அரை
காமப்பூ	,,	,,
கெஞ்சாப்பூ	,,	,,
வில்வப்பூ	,,	,,
கரிச்சாலேப்பூ	,,	,,
கண்டங்கத்திரிபூ	,,	,,
காட்டுஅத்திப்பூ	,,	,,
கரிவேலன்பூ	,,	,,
நெல்லிப்பூ	,,	,,
நீர்முள்ளிப்பு	,,	,,
நெரிஞ்சிப்பு	,,	,,
மல்லிகைப்பு	,,	,,
மாதுளம்பு	,,	,,
மருக்காரைப்பு	,,	,,
ரோஜாப்பு	,,	,,
ஆலம்விழுது துளிர்	,,	,,
சூரியகாந்திப்பு	,,	,,
ஆவாரம்பூ	,,	,,
அமுக்குரும்பூ	,,	,,
புங்கம்பூ	,,	,,
வேப்பம்பூ	,,	,,
பொற்கலையான்பு	,,	,,
தாமரைப்பு	,,	,,
தூதுளம்பு	,,	,,
கொத்தமல்லி	,,	,,
துளசிவிரை	,,	,,
நீர்முள்ளிவிரை	,,	,,
சப்சாவிரை	,,	,,
கசகசா	,,	,,
ஜாதிக்காய்	,,	,,
வால்மிளகு	,,	,,
பூனைக்காலிவிரை	,,	,,
நாயுருவிவிரை	,,	,,
அரசம்பட்டை	,,	,,

மயிர்மாணிக்கம்	பலம்	அரை
சாலாம்பிசினி	,,	,,
நன்னாரிவேர்	,,	,,
அதிமதுரம்	,,	,,
சுக்கு	,,	,,

இந்த நாய்பத்தேழு தினுசுகளையும் நிறுத்தெடுத்து உலர்த்தி சூரணித்து சீலையில் வடிக்கட்டி வைத்துக்கொண்டு ஒருமண் பாண்டத்தில் அரைபடி பசும்பால்விட்டு அடுப்பேற்றி தீமூட்டி யெரிந்துக்கொண்டிருக்கையில் முன் யிடித்து வைத்திருக்கும் சூரணத்தை யெடுத்து பிள்ளை, பெறாத மங்கிலியஸ்திரீயிடம் கொடுத்து சிருகத்தூவிக்கொண்டு வரச்சொல்லி நீ ஜாக்கிரதையோடு கிளரிக்கொண்டு வந்து சூரணம் முழுமையும் ஆனவுடன் சாரப்பருப்பு கால்படி மாதுளம்பருப்பு உழக்கு திராக்ஷிபழம் பலம் 5 பேரீச்சம்பழம் 5 இவைகளைச்சேர்த்து நன்றாய்க்கிளரி அதில் கால்படி செவ்வெளநீர் வார்த்து சீனி பலம் 5 போட்டு பனங்கற்கண்டு பலம் 5 சேர்த்து பசுவின் நெய்விட்டு கிளரி தேன் உழக்கு விட்டு அடிப்பிடிக்காமல் கிண்டி அடுப்பை விட்டியிறக்கி மேல்மூடி வைக்கவும். ஆனால் யெறிக்கும்படியானவிறகு ஒரே ஜாதியாகயிருக்கவேண்டும். உபயோகம் இந்த லேகியஞ் சாப்பிடும்போது முதல் ஸ்நானஞ்செய்து மறுநாள் பேதிக்குச் சாப்பிட்டு மறுநாள் முதல் லேகியத்தை புன்னைக்காயளவு 40 நாள் சாப்பிடவும் இந்த 40 நாளும் இச்சாபத்தியமாக யிருக்கவேண்டும் காலை மாலையும் பால் தயிர் நெய் இதுகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். யெண்ணை கடுகு கூடாவாம் முக்கியமாய் ஸ்திரீபோகம் பொடி சுருட்டு லாகிரி வஸ்துக்களை நீக்கப்பட்டதாம்.

நீரொழுக்கு ஆராத யிரணங்களுக்கு குப்பமேனிச் சூரணம்.

குப்பமேனியிலையைக் கொண்டுவந்து நிழலுலர்த்து சூரணித்து அத்துடன் சமமாகக் கருஞ்சீரகத்தை சூரணித்துக் கலந்து வைத்துக்கொண்டு 40 நாள் சாப்பிட்டுக்கொண்டுவர பித்தம், வாய்வு இவைகளைப்போக்கும் பசியுண்டாம் மந்தம் தீரும் ஆறாத விரணங்கள் ஆறியுலரும்.

பவுத்திரங் கண்டமாலைக்கு பத்து.

அமுக்கனங்கிழங்கு	பலம்	க
பெருங்காயம்	,,	க

இவை இரண்டையும் சந்தனக் கல்மேல்வைத்து கோழிமுட்டை வெள்ளம்பிலியை விட்டு மைபோல் அரைத்து வழித்து அரையாப்பு புண் கண்டமாலை பவுத்திரம் இன்னும் பலவிதமான மேகவிரணங் களுக்கு மேல் பூசிக்கொண்டுவர ஆறியுலரும்.

பவுத்திரங் கண்டமாலைக்கு விருத்தம்.

வகுக்கக்கேள் கண்டமாலை பவுத்திரங்கள்
வலுமையுள்ள விப்புருதி வீக்கந்தானும்
தொகுக்கக்கேள் துடைவாழைபுண்சூலைத்தான்
தொந்திரவு செய்வும் பிளவைவீக்கத்தோடு
மிகுத்திட்ட அரையாப்பு மூன்றுமெய்யா
வேதனைகள் செய்யாம லுடைந்துப்போக
பகுக்கக்கேளதற்குறிய மருந்தைநீயும்
படியினிலே கூறுவேன் பரிந்துதானே.

இதுவுமது.

பரிந்துடனே அமுக்கனுங் கிழங்கிரேடும்
பாசமுள்ள பெருங்காயமிரண்டுங் கொண்டு
தெரிந்திடவே கோழிமுட்டை தன்னைவாங்கி
திகழுமதின் வெள்ளாம்பல் தன்னைவிட்டு
நெரிந்திடவே சந்தனக்கல் தனிலுரைத்து
நேமமா மைபோலே வாரிக்கொண்டு
சொரித்திடவே யப்புண் மேற்கனமாய்பூசிச்
சொலப்போகுங் கஷாயத்தின் சூக்ஷங்கேளே.

இதுவுமது.

கேளப்பா காசநாங்கண்ணி சாற்றிற்
கீரத்தியுள்ள கற்றாழை மடலைச்சீவி
வெளப்பாவுள்ளிருக்குஞ் சோற்றைத்தானும்
விதமாகவெடுத்தந்த சாற்றிற் சேர்த்து
நாளப்பா யிரவியினி காயவைத்து
நன்றாகப்பத்து பலமானபோது
* ஆளப்பா திருகடுகு திருபலாதி
அதைக் கொண்டுவருத்திடித்து வதனிற்சேரே.

---

* திருகடுகு-சுக்கு மிளகு-திப்பிலி.
* திருபலாதி-தான்றி-நெல்லி-கடுக்காய்

சேர்த்திந்த வகைகளெல்லா மொன்றாகத்
தீயினிலே காயவைத்து மெழுகதாக
பார்த்ததனையிரக்கி கொண்டுடனேகேளாய்
பகருஞ்சர்க்கரைபலந்தான் பத்துகொண்டு
சேர்த்தியுடனதிற்கலந்து எட்டொன்றாக்கி
கேளப்பாசாடியினில் வைத்துக்கொண்டு
பூர்த்தியாய்ப் புன்னக்காயளவதாகப்
* புண்ணியனேமண்டலந் தானென்றுகொள்ளே.
மண்டலந்தானொன்றுக் கிருபோதாக
மாறாமல்லதையருந்த மைந்தாய்கேளாய்
கண்டமாலைகள்பவுத்திரம் வீக்கம்தானும்
கட்டியதோர் துட்வாழை அரையாப்போடு
கொண்டபுண்புரைகளெல்லாங் கெதிகெட்டோடும்
குருவாகவதையெண்ணி செய்திட்டாலே
அண்டிடாதெப்போது மாய்ந்துபாரும்
அப்பனேயாயிசொல்லு மதியிதாமே.

கட்டுவாதி லேகியம்.

சீமை அதிவிடையம்	விராகனிடை	௫
கடுக்காய்ப்பூ	,,	௫
மாசிக்காய்	,,	௫
மாதுளம்பழந்தோல்	,,	௫
ஜாதிக்காய்	,,	௫
லவுங்கப்பட்டை	,,	௫
போஸ்தக்காய்	,,	௫
கசகசா	,,	௫
மாங்கொட்டை பருப்பு	,,	௫
புளியங்கொட்டை தோல்	,,	௫
அபினி	,,	கஉ
கோரோஜனம்	,,	கஉ
நல்லவெல்லம்	பலம்	கஉ
பசுநெய்	,,	௫

நெய்யை பாண்டத்திலிட்டு அடுப்பிலேற்றி வெல்லத்தைப் போட்டு இவைஇரண்டும் கலந்து பாகு ஆகும்போது மேற்படி

* மண்டலம் 40 நாள்.

தினுசுகளை சூரணஞ்செய்து வைத்துக் கொண்டிருந்து பாகில் சிறுக சிறுகப் போட்டுக் கிளறி லேகியம்போல் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆகும் பெரியவர் களுக்கு சுண்டைக்காய் பிரமாணமும் குழந்தைகளுக்கு துவரை பிர மாணமும் குழந்தைகளுக்கு துவரை பிரமாணமும் காலையில் கொடுக் கவும். மூன்றுவேளையில் சீதக்கழிச்சல் ரெத்தமந்தம் அல்லது அஜீ ரணம் இவைகள் நிற்கும்.

மதன காமேசுர லேகியம்.

அதிமதுரம்	பலம்	க
அபினி	,,	க
முள்வேலம்பிசினி	,,	க
கசகசா	,,	க
செண்பகப்பூ	,,	க
மிளகு	,,	க
சிறுநாகப்பூ	,,	க
ஜாதிக்காய்	,,	க
லவங்கப்பத்திரி	,,	க
தாளிச்சப்பத்திரி	,,	க
பெருஞ்சீரகம்	,,	க
திராக்ஷிபழம்	,,	க
உளுந்து	,,	க
தக்கோலம்	,,	க
அசுவகேந்தி	,,	க
கொத்தமல்லி	,,	க
லவங்கப்பட்டை	,,	க
ஏலம்	,,	க
திப்பிலி	,,	க
கிராம்பு	,,	க
சுக்கு	,,	க
வால்மிளகு	,,	க
தான்றிக்காய்	,,	க
நெல்லிக்காய்	,,	க
கடுக்காய்	,,	க
ஜாபத்திரி	,,	க

கோஷ்டம்	பலம்	ஒன்று
கருஞ்சீரகம்	,,	,,
கஸ்தூரிமஞ்சள்	,,	,,
நீர்முள்ளிவித்து	,,	,,
நிலப்பனங்கிழங்கு	,,	,,

இவைகளை நிறுத்தெடுத்து வருக்கவேண்டியதுகளை வருத்து பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு இதற்குச்சரி யிடையாய் கெஞ்சாவை நிருத்தெடுத்து நல்லஜலத்தில் 7 தரங்கழுவி எடுத்து விரை கிரம்பு முதலானதும் நீக்கி நாலுபடி ஜலத்தில் ஒரு படி பசுவின்நெய்விட்டு அதில் கெஞ்சாவைப்போட்டு நன்றாய்க் காய்ச்சி சிட்டிக்கட்டி நெய்யை அயச் சட்டியில் பிழிந்துக்கொண்டு மற்ற நெய்யும் கையால் நன்றாய் வழித்தெடுத்துக்கொண்டு, பசும் பால் அரைப்படி சர்க்கரைப்பலம் 60 ஒன்றாய்விட்டு அடுப்பிலேற்றி பாகுபதத்தில் சூரணங்களைக்கொட்டி நெய்யைவிட்டு லேகியப்பத மாகக்கிளறி இறக்கிவைத்துக்கொண்டு இரவில் புசித்தானபிறகு (கவ) விராகனிடை முதல் (ரு௯) கால்வராகனிடை வரையில் புசிக்க லாம் வீரியம் அதிகரிக்கும் தேகம் சிவந்துவரும் கண்குளிர்ந்து பிரகாசிக்கும். மீளை யிருமல் மந்தம் சூலை பழையசுரம் க்ஷயம் இவை கள் நீங்கும் தேக ஆரோக்கியமும் மனதிடமும் உண்டாகும்.

மேகம் உக-க்கும் லேகியம்.

செகப்புநாயுரிவேர்	பலம்	அரை
செகப்புநெரிஞ்சிவேர்	,,	,,
கையாந்தகரைவேர்	,,	,,
மாவிலிங்கன்வேர்	,,	,,
மிளகரணைவேர்	,,	,,
சிவன்வேம்புவேர்	,,	,,
காட்டுக்கருணைவேர்	,,	,,
நீர்முள்ளிவேர்	,,	,,
வில்வவேர்	,,	,,
துத்திவேர்	,,	,,
வெள்ளெருக்கன்வேர்	,,	,,
சீதேவிசெங்கழுனிவேர்	,,	,,

நிலேமந்தம்வேர்	பலம்	அரை
வெள்ளைவிஷ்ணுகாந்திவேர்	,,	,,
ஆனைநெரிஞ்சிவேர்	,,	,,
பொன்னாங்கண்ணிவேர்	,,	,,
உப்பிலாங்கொடிவேர்	,,	,,
அவுரிவேர்	,,	,,
முடக்கத்தான்வேர்	,,	,,
புங்கன்வேர்	,,	,,
கருவுமத்தன்வேர்	,,	,,
எட்டிவேர்	,,	,,
ஆடுதின்னாம்பாளைவேர்	,,	,,
விலாரிவேர்	,,	,,
சிருகட்டுக்கொடிவேர்	,,	,,
ஆலம்பட்டை	,,	,,
பூமிசர்க்கரைக்கிழங்கு	,,	,,
மருதம்பட்டை	,,	,,
பூவரசன்பட்டை	,,	,,
செங்கரிந்தாபட்டை	,,	,,
பாவட்டையிலே	,,	,,
புளிகருணைகிழங்கு	,,	,,

இந்த முப்பத்திரண்டு தினுசுகளையும் நிறுத்தெடுத்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு ஒரு பாண்டத்தில் அரைவீசை பசும் நெய்யைவிட்டு அடுப்பிலேற்றி நெய்யுரிகினவுடன் சர்க்கரை பலம் பத்துப்போட்டு பாகுபதத்தில் மேல்படி சூரணத்தை சிருக சிருக தூவிக்கொண்டே கிளரவேண்டியது. நெய்போதாவிட்டால் முன்பாகக்காய்ச்சி யேடுகட்டிய பசும்பால் போதுமானமட்டும் நிதானமாய் விட்டுக்கொண்டு கிளரவும் இரக்கும்போது மலே தேன் 5 பலம் விரையில்லாத பழைய திராக்ஷிப்பழம் பலம் 5 பொடியாகக் கத்தரித்த பாதம்பருப்பு பலம் 5 போட்டுக் கிண்டி வைத்துக்கொள்ளவும் கற்புதோன்றமல் தின்பதற்கு இனிப்பாகவும் வியாதியைக் கண்டிக்கும் தன்மையுள்ள லேகிய மென்றறியவும் காலே மாலே யிருவேளையும் புன்னைக்காய் வீதம் 20 நாள் சாப்பிடவும். மீன், கருவாடு, இறைச்சி, லாகிரி, ஸ்ரீபோகம் புகைசுருட்டு இவைகள்கூடாது. மேகம் 21 தீரும் கருமேகத்தையுங் கண்டிச்கும். இச்சாபத்தியம்.

இரச ஔஷதஞ் சாப்பிட்டதினால் உண்டாகிற உமிழ் நீர்சுரப்பிக்கும் ஈரில் உண்டாகும் புண்களுக்கும் மருந்து.

ஒருதுண்டு காசுகட்டியை வாயிலிட்டு வைத்துக் கொள்ளவேண்டும். இப்படி தினம் இரண்டு மூன்றுதரஞ் செய்யலாம். தொண்டை நோவுக்கு நல்லதாயிருக்கும் மிகுந்த நாற்றமானப் பழுப்புடனேயிருக்கிற பழயபுண்களுக்கு ஒரு திறும் காசுகட்டியை ஒரு அவுன்ஸ் மெழுகு பிளாஸதிரியில் சேர்த்துயிடவேண்டும். இதுவுமன்றி 6 திறும் காசுகட்டியை அரைப்புட்டிக் கொதிக்கிற ஜலத்தில்விட்டு ஆறினபின் வடிக்கட்டிப் புண்களைக் காலையிலுஞ் சாயந்தரமும் கழுவினாலுங் குணமுண்டாகும். முலைக்காம்பில்வரும் இரணங்களுக்கும் நன்று. முலைக்காம்பில் இரணமிருக்குஞ் ஸ்திரீகள் பிரசவிக்கிறதற்கு இரண்டு மாதத்திற்குமுன் முலைக்காம்புகளிலும் முலைகளிலும் மேற்படி தண்ணீரைத் தொட்டுவைத்தால் குழந்தை பால் குடிக்கிற சமயமாகும்போது இரணம் உண்டாகாது பல்குழிந்தும் அதற்குள் தசைவளர்ந்து மிருக்கிற பல்வலிக்கு ஒரு துண்டு காசுக்கட்டியை அந்தக் குழியில் திணித்தாலும் வாயிலிட்டு ஒதிக்கிக்கொண்டாலும் சுகத்தைக் கொடுக்கும்.

திரேகத்தில் யெங்கேயாகிலும் கொப்பளமுண்டாக.

சிவந்த சித்திரை மூலமும் வேரைப்பரித்தவுடன் அதின்தோலையுரித்துக் கொஞ்சம் கஞ்சித்தண்ணீர்விட்டு கட்டியாய் அரைத்து ஒருதுண்டுதுணியில் தடவிக் கொப்பள முண்டாக்கவேண்டும் வேண்டியயிடத்தில் வைத்துக்கட்டவேண்டும் கட்டி 5 மினிட்டு நேரஞ்சென்றபொழுது எறிவும் வலியுமுண்டாகி அது அரைமணிவரை அதிகரித்திருக்கும் இதின்பின் அதை எடுத்துவிட்டால் எறிவும் வலியுந் தணிந்து அப்புறம் 12 அல்லது 18 மணி நேரத்தில் பெரிய கொப்பளமுண்டாகும் இதிலுண்டாயிருக்கிற சலத்தைக் குத்தியெடுத்துவிட்டு ஒரு வாழையிலை துண்டை வைத்துக் கட்டவேண்டும். புண் சுருக்காய் ஆறிபோகும் இப்படிக்கொத்த கொப்பள முண்டாக்கும் ஔஷதங்களை கோரமான இருமலுக்கு நெஞ்சிலும் தலைவலிக்கும் மற்ற நோய்களுக்கும் கழுத்தின் பிடறியிலும் வைத்துக்கட்டினால் நன்று.

இரணங்களுக்கு மருந்து.

சிறு குறட்டாய் வேரைத் தூளாயிடித்து வேப்பெண்ணெயிற் கலந்து கெட்டப் புண்களுக்குப் பூசினால் விலைப்பெறறப் பரிகார மாய்க் காணப்படும். சில சமயத்தில் காதிலுள்ள புண்ணும் ஆறும் மூக்கிலுள்ளப் புண்களுக்கும் உபயோகிக்கப்படும்.

படர்தாமரைக்கு மருந்து

சீமை அகத்தியிலையைப் பரித்து அரைத்து அதற்குச் சம னிடை மெழுகு பிளாஸ்திரி அல்லது தேங்கா யெண்ணெயிற் சேர்த் துத் தினந்தோறும் இரண்டுதரம் அழித்தி தேய்த்துவர தோலைப் பற்றிய படர்தாமரை நீங்கும்.

கடவுள் துணை.

அனுபோகக்

கைமுறை கியாழவர்க்கம்.

விநாயகர் துதி.

விருத்தம்.

பையவே பதினெண்பேர்கள் பயன்றகாவியங்களாய்ந்து,
செய்முறையாகவேதான் ஜெகத்துளோரறிய நன்ருய்
கைமுறைக் கியாழவர்க்கங் கருதுமின் னூலைச்சொல்ல
ஐயராமைங்கரத்தன் அடியிணைச் சென்னிவைப்பாம்.

குழந்தைகளுக்குக்காணும் வாதபித்த சிலேத்துமமாந்தங்கட்குக் கியாழம்.

ஓமம்	பலம்	௩
வெள்ளுள்ளி	,,	௩
மிளகு	,,	௩
திப்பிலி	,,	௩
சுக்கு	,,	௩

இவைகளை நிறுத்தெடுத்து துணியில் மூட்டைக்கட்டி ஒரு மண் பாத்திரத்திலிட்டு அதில் ஒருபடி ஜலம்விட்டு அடுப்பேற்றி ஆழாக் காய் வற்றக்காய்ச்சி வடித்து காலையில் ஒருபாலடை விதங் கொடுத்து வர நிவர்த்தியாகும் இச்சாபத்தியம்.

வேறு முறை கியாகும்.

வேளைவேர்	பலம்	௩
சுக்கு	,,	௩
வெந்தயம்	,,	௩
வெள்ளைப்பூண்டு	,,	௩

வசம்பு	பலம்	வ
ஓமம்	,,	வ

இவைகளை நிருத்தெடுத்து வருத்து ஒருபடி ஜலத்தில் போட்டு அடுப்பேற்றி யெட்டொன்ருய் வற்றக்காய்ச்சியக் கியாழத்தில் சங்களவாக இருவேளையுங் கொடுத்துவரத் தீரும். இச்சாபத்தியம்.

வேறுமுறை கியாழம்.

நுணாயிலை	பிடி	க
நொச்சியிலை	,,	க
கழற்கொடியிலை	,,	க

இவைகளை யெடுத்து ஒரு சட்டியிலிட்டுக் கரிக்கி அதில் ஒரு படி ஜலம் விட்டு பின்பு அதில் ஓமம் வசம்பு சுக்கு மிளகு பொடுதலைக்காய் திப்பிலி இவைகளை நல்லெண்ணையை விட்டுச் சிவக்க வறுத்துத் துணியில் மூட்டைக்கட்டிப் போட்டு அடுப்பேற்றி யெட்டொன்ருய் வற்றக் காச்சிவடித்தக் கியாழத்தில் சங்களவு கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

வேறுமுறை கியாழம்.

வேலிப்பரித்தியிலை வேளைவேர் நொச்சி பொடுதலை நுணா முருங்கை இவைகளின் ஈர்க்கு வகைக்கு ஒரு பிடியை வருத்து ஒரு படி ஜலத்தில் போட்டு அதில் ஓமம் சுக்கு மிளகு திப்பிலி வசம்பு இவைகள் வகைக்குப் பலம் கால் யெடுத்து வெதிப்பி துணியில் முடித்துப்போட்டு அடுப்பேற்றி யெட்டொன்ருய் வற்றக்காய்ச்சியக் கியாழத்தில் சங்களவுக் கொடுத்துவரத் தீரும். இச்சாபத்தியம்.

மாசிப்பத்திரி	பலம்	வ
பர்ப்பாடகம்	,,	வ
நாயுருவி	,,	வ
முக்காவேளை	,,	வ
கருஞ்சீரகம்	,,	வ
கோழியெச்சம்	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்து சட்டியிற் போட்டு அடுப்பேற்றி பஸ்பஞ் செய்து அதில் வெட்டிவேர் சங்கம்வேர் ஏலம் கடுகு ரோகணி பறங்கிப்பட்டை கடுக்காய் மாசிக்காய் வசம்பு தான்றிக்காய் மூத்தக்காசு இவைகள் வகைக் கொருவிராகனிடை தட்டிப்போட்டு இரண்டுபூடி ஜலம் விட்டு யெட்டொன்றாய் வற்றக்காய்ச்சியக் கிழாயத்தில் வேளையொன்றுக்கு சங்களவுக்கொடுக்க தீரும். இச்சாபத்தியம்.

ஊதுமாந்தத்திற்கு கியாழம்.

பொடுதலை வேம்பு மாம் புளி நுணா நொச்சி வேலிப்பரித்தி இவைகளின் யிர்க்கு ஓர் சமமாக யெடுத்து அதற்கு நிகர் ஓமம் உள்ளி திப்பிலி சேர்த்திடித்து ஒருபடி ஜலத்திற்போட்டு ஆழாக்காய் வற்றக்காச்சியக் கியாழத்தை வடித்து சங்களவு காலைமாலை இரு வேளையுங் கொடுத்துவர (தீரும் மாந்தங்கள்) ஊதுமாந்தம் பேதி மாந்தம் இவைகள் சுத்திமாந்தம் தீரும் இச்சாபத்தியம்.

நீர்மாந்தத்திற்கு கியாழம்.

நீலிவேர்	பலம்	வ
செல்லியம்	,,	வ

இவை இரண்டையும் நிறுத்து தட்டி அரைபடிஜலத்தில்போட்டு அரிக்கால்படியாய் வற்றக்காய்ச்சி வடித்தக் கியாழத்தில் சங்களவு கொடுக்கத் தீரும்.

விஷாமாந்தத்திற்கு கியாழம்.

நுணாவேர்	பலம்	வ
நொச்சிவேர்	,,	வ
வேளைவேர்	,,	வ
ஓமம்	,,	வ
பொடுதலை	,,	வ
வெங்காயம்	,,	வ
வசம்பு	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்து நொரிக்கி வெதுப்பி ஒருபடி ஜலத்திற் போட்டு யெட்டொன்றாய் வற்றக்காச்சி சங்களவாக இரு வேளையுங் கொடுத்துவர தீரும். இச்சாபத்தியம்.

போர்மாந்தத்திற்கு கியாழம்.

நுணா வேலிப்பருத்தி பொடுதலை வெற்றிலை இவைகள் வகைக்கு விராகனிடை 1 ஆமைஓடு வசம்பு பூண்டு ஓமம் கிராம்பு இவைகளை சமமாய் நிறுத்தெடுத்து வெதிப்பி ஒருபடி ஜலத்தில்போட்டு யெட்டொள்ருய் வற்றக்காச்சியக் கியாழத்தில் சங்களவுகொடுக்கத் தீரும்.

பால்மாந்தத்திற்கு கியாழம்.

பொடுதலைக்காய்	பலம்	வ
இந்துப்பு	,,	வ
வசம்பு	,,	வ
வெள்ளைப்பூண்டு	,,	வ
மிளகு	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்து சட்டியிலிட்டு வெதிப்பிட அதில் ஒருபடி ஜலம் விட்டு காற்படியாக வற்றக்காச்சி வடித்தக் கியாழத்தில் காலையில் சங்களவுக் கொடுத்துவர தீரும் இச்சாபத்திபம்.

கட்டுமாந்தத்திற்கு கியாழம்.

சீந்தல்தண்டு	பலம்	வ
களிப்பாக்கு	,,	வ
சிவதைவேர்	,,	வ
கடுக்காய்	,,	வ
சுக்கு	,,	வ
கடுகுரோகணி	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்துத் தட்டி சட்டியிலிட்டு அதில் ஒருபடி ஜலம்விட்டு அடுப்பேற்றி யெட்டொன்ருய் வற்றக்காய்ச்சி வடித்தக்கியாழத்தை சங்களவாக மூன்றுதினங்காலையில் கொடுத்துவர தீரும். இச்சாபத்தியம்.

சிருதேக்கு	பலம்	வ
வாய்விளங்கம்	,,	வ
வால்மிளகு	,,	வ
கடுகுரோகணி	,,	வ

சுக்கு	பலம்	வ
ஏலம்	,,	வ
திப்பிலி	,,	வ
இலவங்கம்	,,	வ
தான்றிக்காய்	,,	வ
தக்கோலம்	,,	வ
பேஸ்தகாய்	,,	வ

இவைகளை நிறுத்திடித்து இரண்டு படி ஜலத்திற்போட்டு அடுப்பேற்றி யெட்டொன்ருய் வற்றக்காச்சி வடித்தக்கியாழத்தில், சங்களவாக மூன்றுதினங் கொடுக்க கிராணிமாந்தம் சுரக்கட்டி விஷ தோஷங்கள் இசுவுமாந்தம் சோகை காமாலை சுரம் கோழை கோட்டா விபொருமல் தும்பல் பித்தகணம் பாண்டு இவைமுதலானதுந் தீரும் இச்சா பத்தியம்.

வேறுமுறை கியாழம்

பொடுதலையிர்க்கு	பிடி	க
மாவிலையிர்க்கு	,,	க
புளியனீர்க்கு	,,	க
வேப்பநீர்க்கு	,,	க
நொணாயிர்க்கு	,,	க
வேலிப்பரித்தியிலையிர்க்கு	,,	க
நொச்சியிலையிர்க்கு	,,	க
வெள்ளைப்பூண்டு	கழஞ்சு	க
திப்பிலி	,,	க
ஓமம்	,,	க

இவைகளை நிறுத்திடித்து ஒருபடி ஜலத்திற்போட்டு அடுப்பேற்றி யெட்டோன்ருய் வற்றக்காச்சி வடித்தக்கியாழத்தில் வேளை வேளையொன்றுக்கு சங்களவுவீதம் மூன்று நாள் கொடுக்க ஊது மாந்தம் போர்மாந்தம் சேரியாமாந்தம் கட்டுமாந்தம் சந்திமாந்தம் இவைகள் தீரும இச்சாபத்தியம்.

வாதபித்தகணத்திற்குக் கியாழம்.

சீரகம்	பலம்	வ
வில்வபத்திரி	,,	வ
வெங்காயம்	,,	வ
வெந்தயம்	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்து வெதிப்பி ஒருபடி ஜலத்தில்போட்டு அடுப்பேற்றி யெட்டொன்றாய் வற்றக்காச்சி வடித்தகியாழத்திற் சங்களவு கொடுக்க வாதபித்தகணம் தீரும், இச்சாபத்தியம்.

கணமாந்தத்திற்கு சாறு

நொச்சி துளசி முசுமுசுக்கை இவைகளின் யிலை வகைக்கொருபிடி யெடுத்து சட்டியிலிட்டுப் பிட்டவித்துச் சாறு பிழிந்து சங்களவு கொடுக்க தீரும் பத்தியமில்லை.

ஊதுமாந்தகணத்திற்குக் கியாழம்.

ஊசிமல்லி சுக்கு மிளகு திப்பிலி இவைகளை ஓர்நிறையாய் நிருத்தெடுத்து பொடித்து ஒருபடி ஜலத்தில் போட்டு யெட்டொன்றாய் வற்றக்காச்சியக் கியாழத்தில் சங்களவாக யிருவேளையுங் கொடுத்து வர ஊதுமாந்த கணந்தீரும் இச்சாபத்தியம்.

நீர்க்கணத்திற்கு கியாழம்

சாரணைக்காய்	பலம்	வ
மூக்குருட்டைக்காய்	,,	வ
பொடுதலைக்காய்	,,	வ
சுக்கு	,,	வ
மிளகு	,,	வ
திப்பலி	,,	வ
துளசி	,,	வ
சீரகம்	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்துப் பொடித்து ஒருபடி ஜலத்தில் போட்டு யெட்டொன்றாய் வற்றக்காச்சிக் கொடுக்கத் தீரும் சங்களவாக யிருவேளையுங்கொடுக்கவும் இச்சாபத்தியம்.

கழிகணத்திற்கு கியாழம்.

வெங்காயம்	பலம்	வ
வசம்பு	,,	வ
சீக்கிராம்பட்டை	,,	வ

இவைகளை நிறுத்தெடுத்து பொடித்து ஒருபடி ஜலத்திற் போட்டு யெட்டொன்றாய் வற்றக்காய்ச்சி வடித்தக்கியாழத்தில் சங்களவு கொடுக்க தீரும் இச்சாபத்தியம்.

மகா கணத்திற்கு கியாழம்.

சிருகீரைவேர்	பலம்	௩
விஷ்ணுகாந்தி	,,	௩
கீழ்காநெல்லி	,,	௩
சிருபூளைவேர்	,,	௩
வெதுப்படக்கி	,,	௩
சீந்தில்தண்டு	,,	௩
ஆடாதொடை	,,	௩
சீரகம்	,,	௩

இவைகளை நிறுத்தெடுத்து பொடித்துச் சட்டியில்போட்டு அடு பேற்றி யிளம்வருப்பாக வருத்து அதில் இரண்டுபடி ஜலம்விட்டு யெட்டொன்ருய் வற்றக்காச்சி யிறைக்கியக் கியாழத்தில் சங்களவாக கொடுத்துவர தீரும் இச்சாபத்தியம்.

கணங்களுக்குப் பொதுப்பிரயோகக் கியாழம்.

நீர்முள்ளி	பலம்	௨
ஈருள்ளி	,,	௨
கடுக்காய்	,,	௨
தான்றிக்காய்	,,	௨
நெல்லிவற்றல்	,,	௨
சங்கம்வேர்	,,	௨

இவைகளை நிறுத்தெடுத்து ஒருபடி மோறில்போட்டு அரைக் கால் படியாய் வற்றவைத்து யிறைக்கி இரும்புபாத்திரத்தில் வடித்து வைத்துக்கொண்டு ஒருசங்கு இரண்டுசங்கு தினங்கொடுக்க தீராத கணமுந் தீரும் இச்சாபத்தியம்.

வில்வாதித் தயிலம்

விருத்தம்.

சாந்தமாம் வில்வாதித் தயிலங்கேளு
தாரணியில் வில்வவேர் பலந்தான்பத்து
பாந்தமாயிடித்ததனைப் பதக்குநீரில்
பருவமாய்க்காய்ச்சி யெட்டொன்ருக்கிப்
போந்தயெண்ணெ நாழிவிட்டுச் சந்தனம்பலந்தான்
புகழானக்கியாழத்திலரைத்துபோடு
வாய்ந்தமெழுகானால் வடித்துக்கொண்டு
வாகாகமுழுகிவற வரிசைகளே.

(இ-ள்.) வில்வவேர் பலம் பத்து நிறுத்தெடுத்து உறலிலிட்டு துவைத்து ஒரு பாண்டத்தில் பதக்குநீர்விட்டு அதிலிந்தவேரைப் போட்டு அடுப்பேற்றி யெட்டொன்றாக வற்றக்காச்சி அதில் நல்வெண்ணை நாழிவிட்டு ஒருபலம் சந்தனத்தை அரைத்துப்போட்டு மெழுகுபதமாகக் காச்சி வடித்து வைத்துக்கொண்டு மூழ்கவேண்டும் பதக்கென்பது இரண்டுபடி எ-று. (1)

வரிசையாய்மூழ்கிவறப் பித்தம்போகும்
மைந்தனேகபாலத்தில் வெட்டைபோகும்
இருமைபெற ஆக்கிவைக்குமேகம்போகு
மிருகண்ணுந்துதெளிவுண்டா மிருமல்போகும்
உரிசைபெறபித்தமெல்லா மோடிப்போகும்
உள்ளயர்சியுட்சுரங்க ளொழிந்துபோகும்
தரைமீதிற்றள்ளும்பிறக்குஞ் சூட்சஞ்சொன்னேன்
சம்பிரதாயமுமிதுதான் றரணியோர்க்கே.

(இ-ள்.) வாரத்திற்கு இரண்டுவிசை வரிசையாக மூழ்கிக்கொண்டுவர கபாலத்தில் வெட்டையானது தீரும். நேத்திரம் நன்றாகத் தெளிவுறும் இருமல் போகும் பித்தமயக்கந் தீரும் உள்ளயர்சி உட்சுரம் நீங்கும் தழும்பு முதலானதுந் தீரும். ஆனால் ஸ்நானஞ் செய்யும் நாள் பகல் நித்திரை போகம் இவைகளை நீக்கவேண்டும்.

வேங்கைத் தயிலம்

தரணியுள்ளமாணிடர்கள் பிழைக்கவேண்டி
சாற்றுகுரேன் வேங்கையுடதயிலந்தன்னை
கரணியாம் வேங்கைப்பலம் பத்துவாங்கிக்
காச்சிவிடுதூணிநீ ரெட்டொன்றாய்க்காச்சி
திரணியுள்ளகியாழத்தை வடித்துக்கொண்டு
திரமாகயெலுமிச்சம் பழமொன்றாக
அரணியாங்கியாழத்திற் குழப்பிமைபோ
லழகான மெழுகுபதமானவாறே.

(இ-ள்) வேங்கைப்பலம் பத்து நிறுத்தெடுத்து தூணிநீரில் போட்டு அடுப்பேற்றி யெட்டொன்றாய் வற்றக்காச்சிக் கியாழத்தை வடித்துக்கொண்டு அதில் யெலுமிச்சம் பழம் ஒன்றைப்பிழிந்து மெழுகுபதமாக்காய்ச்சி வைத்துக்கொண்டு மூழ்கவேண்டும் தூணிநீ ரென்பதுபத்தரை அல்லது ௩௨படி-எ-று.

பாகம் மூழ்கிவற

ஆனவைகேள் வாதமொடு சூலைபோகும்
அடர்ந்திட்டபித்தமது மாண்டுபோகும்
பீனிசங்கள் மண்டையிடி பிரட்டல்சீதம்
பெலமானவீக்கமுதல் வாங்கிப்போகும்
மேனியெல்லாங்காந்தியுண்டாம் விஷரோகம்போம்
வெகுவாகமுன்சொன்ன தயிலப்போக்கு
பூனிதமாய்சொல்லிவிட்டேன் தெளிவாய்பாரீர்
புகழான்பற்பத்தின் போக்குநூறே.

(இ-ள்.)மேற்கண்ட தயிலத்தை வாரத்திற்கு இரண்டுவிசை மூழ்கிக்கொண்டுவரு பித்தம் பீனிசம் மண்டையிடி பிரட்டல் சீதம் வீக்கம் இவைகள் முதலானதும் தீரும் தேகமானது காந்தியுண்டாகும் முன் கூறியத் தயிலத்தின் போக்காகும்-எ-று.

வெட்டிவேர் தயிலம்.

போக்கான தயிலமொன்று புகலக்கேளு
புதிதானவெட்டிவேர் பலந்தான்பத்து
நோக்காகவிடிந்ததனைப் பதக்குநீரில்
நுணுக்கமாய்க்காய்ச்சியே யெட்டொன்றுக்கி
வாக்காகவடித்ததனில் யெண்ணெநாழி
வளமையாயதிமதுரம் பலந்தானொன்று
தாக்காகயெண்ணெக்கு ளரைத்துகொண்டு
சாந்தமாய்மெழுகுபதந் தன்னில்வாங்கே.

(இ-ள்.) புதிதான வெட்டிவேர் பலம்பத்து நிருத்தெடுத்து உறவிலிட்டு யிடித்துப்பதக்கு நீரில்போட்டு அடுப்பேற்றி யெட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து அதில் நடுலெண்ணெ நாழிவிட்டு ஒரு பலம் அதிமதுரத்தை அரைத்துக்கலக்கி மெழுகுபதமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு மூழ்குவதைக்கேளும்-எ-று.

வாங்கியேமூழ்கிவற வரிசைகேளு
மானிலத்தின்பீனிசங்கள் மண்டைசூலை
யோங்கியேகுட்டமொடு பீநீர்கோவை
யொளிமருவுங்கண்புகைச்சல் காதுமந்தம்
வாங்கியேயெய்ப்பிளவும் புகைகர்லோய்வு
வறிவுகெட்டதாதுசமு மிருமடுகாந்தி
நீங்கியேபோவதற்கு மண்டலந்தான்
நேராகவொன்றைவிட்டு ஒருநாளெண்ணே

(இ-ள்.)மேற்கண்ட தயிலத்தை மூழ்கிவர பீனிசம் மண்டை சூலை குட்டம் சோகை கண்புகச்சல் காதுமந்தம் வெப்பம் பிளப்பு கைக்கால் ஓச்சல் இவைகள் முதலானதுந்தீரும் ஆனால் ஒருமண்டலம் நார்ப்பது நாள் ஒன்றொட்டொருநாள் மூழ்கிக்கொண்டு வரவேண்டும் பகல் நித்திரை போகம் இவைகளை நீக்கவேண்டும் எ-று. (6)

வெம்பின் தயிலம்.

என்னவின்ன மொருதயிலஞ் சொல்வேன்கேளா
யெளிதாகவேம்பி னிடபட்டைவாங்கி
துன்னவேகால்துலா மிடித்துக்கொண்டே
வொருதூணிநீர்விட்டு வொன்றாய்க்காய்ந்தார்
சொன்னபடி யெட்டொன்றாய் வடித்துவாங்கிச்
சுருதிபோமெண்ணெயிரு நாழிவிட்டு
நன்னயமாய யேலக்காய் பலமிரெண்டு
நலமானக்கியாழத்தி லரைத்துப்போடே.

(இ-ள்.) வேம்பின்பட்டை கால்துலான் நிறுத்தெடுத்து இடித்து தூணிநீரில்போட்டு அடுப்பேற்றி யெட்டொனறாக வற்றக்காச்சி கியாழத்தை வடித்துக்கொண்டு அதில் நல்லெண்ணை இரண்டுநாழி விட்டு யேலக்காய் பலம்ரெண்டு யெத்து அரைத்து மேற்படி கியாமம் யெண்ணையில் கரைத்து மெழுகுபதமாகக் காச்சிவைத்துக் கொண்டு கேளும். எ-று.

அரைத்துடனே காச்சியது மெழுகதனல்
ஆற்றியேவடித்துவைத்து முழுகும்போது
நிரைததிட்டவாதமெல்லா மெங்கேபோச்சு
நிசமானசூலையொடு குட்டரோகம்
திரைத்திட்டதழுதணையு மேற்கொடுப்புச்
செங்கரப்பன்புண்புரைகள் சேராதோடு
முரைத்திட்டதயிலத்தி னுறுதிமெத்த
உத்தமனேதயிலமொன்று உரைக்கின்றேனே.

இ-ள்.) மேற்சொன்ன தயிலத்தை காய்ச்சி ஆற்றிவடித்துவைத்துக் கொண்டு வாரத்திற்கு இருமுறை மூழ்கிக்கொண்டுவர வாதம் சூலை குஷ்டம் தழுதணை கடுப்பு செங்கரப்பன் வுண் புரைகள் இவை முதலானதும் தீரும்.எ-று. (7)

குருந்தொட்டி வேர்தயிலம்.

உரைக்கின்றேன் குறுந்தொட்டிவேர்பலங்கே
ளுத்தமனேயொரு துலாம் நிறுத்துப்போடு
நிரைக்கின்றேன் றூணிநீ ரெட்டொன்றாக்கி
நேரானயெண்ணெயிரு நாழிவிட்டுக்
கரைக்கிறேன் கியாழத்தி லரைத்துமைப்போற்
கசகசா இருபலந்தான் கண்டுகொள்ளு
நரைக்கின்றேனெனக்கென்ன வாதமெல்லாம்
நடுநடுங்கியோடுமடா நயந்துபாரே.

(இ-ள்) ஒரு பூலம் குருந்தொட்டிவேரை நிறுத்தெடுத்து யிடித்து தூணிநீரில் போட்டு யெட்டொன்றாகவற்றக்காச்சி கியாழத்தை வடித்துக்கொண்டு அதில் நல்லெண்ணெ இருநாழிவிட்டு அத்துடன் இரண்டு பலம் கசகசாவை அரைத்துக்கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாகத் தயிலத்தைக்காச்சி வடித்துவைத்துக்கொண்டு ,வாரத்திற்கு யிரண்டு முறையாக மூழ்கிக்கொண்டுவர சகலமானவாதங்களும் நடுநடுங்கிபறந்து போகும் ஆனல் ஸ்நானம்செய்யும் நாள் பகல் நித்திரை போகம் நீக்கவும் எ-று (8)

கொடி வேலித் தயிலம்.

நயமானகொடிவேலி பலந்தான்பத்து
நன்றாகவிடித்ததனைப் பதக்குநீரில்
வயமாகக்காய்ந்துவர்த்தி யெட்டொன்றானல்
வண்மையுடன் நல்லெண்ணெநாழிவிட்டு
நியமானபுன்னக்காய் விகிதமாவெண்
ணெய்யுடனே சீரகமோர்பலந்தானிட்டு
சியமாகஅரைத்ததனைப் பாகிற்சேர்த்து
சீரானமெழுகுபத மானவாரே.

(இ-ள்.) கொடிவேலிப் பலம்பத்து நிறுத்தெடுத்து யிடித்துப் பதக்கு நீரில்போட்டு எட்டொன்றாக வற்றக்காய்ச்சி வடித்துக் கொண்டு அதில் நல்லெண்ணெநாழிவிட்டு புன்னக்காய்ப் பிரமாணம் பசும்வெண்ணெய்போட்டு ஒருபலம் சீரகத்தை அரைத்து அதிற் கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாகக்காச்சி யிரக்கவேண்டும் கொடிவேலியென்பது சித்திரமூலம்வேர் ஆவெண்ணெயென்பது பசும்வெண்ணெ எ-று. (9)

ஆனதயிலம் வடித்தேமுழுகும்போது
ஆனந்தவாயவுனுட அந்தரமாம்வாய்வு
தேனமருங்குழலாள்கேள் வாதமெல்லாம்
சிருசொரியுஞ் சிரங்குகுஷ்டம் தினவும்போகும்
போனதொரு அரையாப்பு கிரந்திசூலை
புண்புரைகள் பிளவுமுதற் பொடிப்புவீக்கம்,

நாடினென்னவந்தநோ யனைத்துந்தீரும்
நல்லதொருதயிலமது நாடிப்பாரே.

(இ-ள்) மேற்சொன்னத்தயிலத்தை வாரத்திற்கு இரண்டுவிசை மூழ்கிக் கொண்டுவர வாய்வுமுதலானதுந் தீரும் வாதம்போகும் சொறி சிரங்கு குஷ்டம் தினவு அறையாப்பு கிரந்திசூலை புண்புறைகள் பிளவைபிடிப்பு வீக்கம் இவைகள் முதலானதும் தீரும் ஆனால் ஸ்நானஞ் செய்யும்நாள் பகல்நித்திரையும் ஸ்ரீபோகமும் விலக்க வேண்டும் மீன்கருவாடு கடுகு நல்லெண்ணை நீக்கவும்-எ-று. (10)

சீரகத் தைலம்.

பாரப்பாசீரகமும் பலமிரண்டு
பதமாகவிடித்துநீர் பதக்கிற்போட்டு
சீரப்பாவெட்டொன்றாய்க் கியாழம்வாங்கித்
தெளிவானநல்நெய்யை படிதான்சேறு
கீரப்பாகார்போகி பலந்தானொன்று
கஷாயத்திலரைத்ததனைக் கலக்கிக்கொடு
ஏரப்பாமெழுகுபத மாகவாங்கி
இயல்பாகமூழ்கிவரக் குணத்தைக்கேளு.

(இ-ள்) இரண்டுபலம் சீரகத்தை நிறுத்தெடுத்துயிடித்து பதக்கு நீரில்போட்டு அடுப்பேற்றி யெட்டொன்றாய்வற்றக்காச்சி வடித்துக் கொண்டு அதில் ஒருபடி நல்லெண்ணெய் விட்டு ஒருபலம் கார்போகவரிசியை கியாழம் விட்டு அரைத்துக்கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாகக் காச்சி வைத்துக்கொண்டு மூழ்கிவர குணத்தைக் கேளும் எ-று. (11)

குணமெனன்சுரமெட்டு வாய்வுபத்தும்
மணமென்னவாந்தி பித்தம்கிருகிருப்பு
வாயினால்வந்ததொரு சோகைபாண்டு
கணமென்னகண்டுகுளிர்ச்சி ஊஷ்ணரோகம்
கபாலத்தில் சூடானக்கபநீர்கட்டு
பணமென்னநோய்தீர மருந்துமுண்டோ
பாருலகின்முளைத்த மூலிகையிற்பாரே.

(இ-ள்) குணம் யாதெனில் சுரம்யெட்டும் வாய்வுபத்தும் மேகதடிப்பும் மூலமுந்தீரும் வாந்தி பித்தம் கிருகிருப்பு வாயினால் உண்டாகிய சோகைபாண்டு கண்குளிர்ச்சி ஊஷ்ணரோகம் கபாலச்சூடு கபம் நீர்கட்டு இவைகள் முதலானதும் தீரும் ஆனால் ஸ்நானம் செய்யும் நாள் பகல்நித்திரை ஸ்ரீபோகம் மீன் கருவாடு இவைகளை நீக்கவேண்டும் வாரத்திற்கு இரண்டுவிசை மூழ்கவும் எ-று. (12)

இரணவைத்திய சிந்தாமணி

முற்றிற்று.

